பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை (05.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:130

# ஆஸி.யில் தமிழர்கள் நடத்திய வாகனப் பேரணி மீது தாக்குதல்!

## சிங்களவர் குழு இடைமறித்து அடாவடி! ஐவர் காயம்!!

மெல்பேர்ண், ஏப்ரல் 5

இலங்கையில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, அவுஸ்திரேலியாவில், மெல்பேர்ண் நகரில், புலம் பெயர் தமிழ் மக்கள் நடத்திய வாகனப் பேரணி மீது, அங்குள்ள சிங்களவர் குழு ஒன்று தாக்குதல் நடத்தி அடாவடித்தனம் புரிந்தது.

அந்தத் தாக்குதலின் போது தமிழ் மக்கள் ஐவர் படுகாயம் அடைந்தனர்; ஏழு வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. வாகனங்களை தடுத்து இடைநிறுத்தி அவற்றுக்குள் இருந்த தமிழ்மக்கள் தாக்கப்பட்டனர்.



தாக்குதல் நடத்தப்பட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸாரையும் சேதமடைந்த ஒரு வாகனத்தையும் காணலாம்.

பேரணி மெல்பேர்ண் நகரின் ஊடாகச் சென்று கொண்டிருந்த போது திடீரென சிங்களவர் குழுவின் தாக்குதலுக்கு இலக்கானது. விக்டோறியா நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தக் குழுமியிருந்த சிங்கள்வர்களே இத் தாக்குதலை நடத்தினர்.

பேரணியில் சென்று கொண்டிருந்த தமிழர்களின் வாகனங்களை இடைமறித்து நகரவிடாமல் நிறுத்திவிட்டு - அவற்றின் மீது கூட்டம் கூட்டமாக ஏறி தடிகள் பொல்லு

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ.(சா) பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின

கொழும்பு, ஏப்.5

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண)தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி வெற்றியை நெருங்கிவிட்டதாக படையினர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்.5

முல்லைத்தீவில் முன்னேறிக்கொண்டிருக்கும் படையினர் இறுதிவெற்றியை நெருங்கிவிட்டார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா தெரிவித்தார்.

நேற்று முழுநாளும், முன்தினமும் நடந்த கடும் சண்டையில் விடுதலைப் புலிகளின் நூறு உறுப்பினர்கள் கொல்லப்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு துளைக்காத வாகனம் புதுக்குடியிருப்பில் மீட்பு

கொழும்பு, ஏப்.5

புதுக்குடியிருப்பில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் குண்டு துளைக்காத வாகனம் ஒன்றை சேதமடைந்த நிலையில் மீட்டுள்ளனர் என்று பாதுகாப்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை., அளம்பில் கடற்பரப்பில் 2 தடவைகள் கடும் கடற்சமர்கள்

கொழும்பு, ஏப்.5

முல்லைத்தீவுக்கு வடகிழக்கே அளம்பில் கடற்பகுதியில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்குப் பின்னரும் நேற்று சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கும் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் பெரும் கடற்சமர்கள் இடம்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய தாக்குதல்களில் 29 பேர் பலி!

கொழும்பு, ஏப்.5

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்றுப் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 29 பேர் கொல்லப்பட்டனர்; 31 பேர் காய மடைந்தனர் என இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய தாக்குதல்கள் தொடர்பாக, இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் பகுதிகளில் நேற்று சனிக்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் கட்சி அலுவலகம் மீது தாக்குதல்: ஒருவர் பலி!

மட்டக்களப்பு, ஏப்.5

மட்டக்களப்புக்கு வடக்கே இயங்கிவரும் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார்.

அந்த அலுவலகத்தில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ–9 வீதியூடான மின்சார விநியோகத்துக்கான கட்டமைப்புகள் சீர்செய்யப்படுகின்றன

### பணிகள் ஆரம்பமாகிவிட்டன என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஏப்.5

தெற்கில் இருந்து ஏ-9 பாதை ஊடாக வடக்குக்கு மின்சார விநியோகத்துக்குரிய கட்ட மைப்புக்களை சீர்செய்யும் பணிகள் துரிதமாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள்கள் மற்றும் நானாவித பொருள்கள் 21 லொறிகளில் ஏ-9 வீதியூடாக எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப்.5

கொழும்பில் இருந்து அத்தியாவசிய மற்றும் நானாவித பொருள்களுடன் 21 லொறிகள் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு நாவற்குழி களஞ்சியத்தை வந்தடைந்தன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களை விடுவிக்குமாறு புலிகளிடம் ஐ.நா.செயலர் கோரிக்கை

ஜெனிவா, ஏப்.5

இலங்கையில் மோதல்களில் சிக்குண்டுள்ள பொதுமக்களை விடுவிக்க வேண்டும் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீமூன் விடுதலைப் புலிகளிடம் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

. வன்னியில் உள்ள பொதுமக்கள் பாது காப்பற்ற சூழலில் வாழ்வதாகவும் அங்கு உயிரிழப்புக்கள் அதிகரிப்பதாகவும் விடுதலைப்புலிகள் சிறிய நிலப்பரப்பில் பொது

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வன்னி மக்களுக்கு பொருள்கள் சேகரிப்பு

### இரண்டாவது கட்டமாக அனுப்பப்படும்

லண்டன், ஏப்.5

வன்னியில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை 'வணங்காமண்' கப்பல் மூலம் அனுப்பும் திட்டத்தின் பிரகாரம் ஐரோப்பிய நாடுகளில் அன்பளிப்புப் பொருள்கள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே லண்டனில் சேகரிக்கப்பட்ட 400 மெற்றிக் தொன் பொருள்களை 'வணங்காமண்' கப்பல் மூலம் அனுப்பும் பணிகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் உதவிப் பொருள்களை இரண்டாம் கட்டமாக அனுப்புவதற்காக பொருள் சேகரிக்கும் பணி நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் நேற்று ஆரம்பமாகின.

பொருள்கள் சேகரிப்பதற்கென அறிவிக்கப்பட்ட நிலையங்களில் நேற்றுக் கூடிய பெரும் எண்ணிக்கையான புலம்பெயர்ந்த தமிழர்கள் அன்பளிப்புப் பொருள்களை வழங்கினர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பாதுகாப்பு வலய நிலைமையையும் ஐ.நா. சபை அதிகாரி கீலன் ஆராய்ந்தார்

கொழும்பு, ஏப்.5

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் மனிதஉரிமை அமைப்புச் செயலாளரின் பிரதிநிதி வோல்டர் கீலின் மூன்று விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து வருகிறார் என ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போரின் நிலைமை, வன்னியில் இருந்து வந்து படையினரின் விசாரணைக்கு உட்பட்டுள்ளவர்களின் நிலைமை, வன்னி மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் வாழும் மக்களின் நிலைமை ஆகியன தொடர்பாக அவர் விரிவாக ஆராய்ந்து வருகின்றார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர்-பொன்னாலை வீதி இருவழிப் பாதையாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

இருவழிப் போக்குவரத்துப் பாதையாக காரைநகர் பொன்னாலைப் பால வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சுமார் 400 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதிப் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காரைநகரையும், பொன்னாலையையும் இணைக்கும் இந்த பாலவீதி 1864 இல் அமைக்கப்பட்டது. இதன் பின்னர் பாரிய புனரமைப்புப் பணிகள் தற்போதே மேற்கொள்ளப்படுகின்றன. (50-250)

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை (ரக்கரை) சின்னம்மா



காரைநகர், களபூமி, கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் கருவியாத்தனையை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடம், அரசடி வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னம்மா நேற்று (04.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் துரைராசசிங்கம் (வவுனியா), சண்முகம் (கனடா), தவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 290, அரசடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
கணவர்.

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருப்பணி தொடர்பான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.5

ஈழத்துச் சிதம்பரம், காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணியை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் திருப்பணி சம்பந்தமான இடர்பாடுகள் தொடர்பாகவும் பொது மக்களுடன் ஆராயும் கூட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு ஆலய மாணிக்கவாசகர் மடலாயத்தில் இடம்பெறவிருக்கின்றது. சகலரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு திருப்பணிச் சபையினர் கேட்டுள்ளனர். (1)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, கொக்குவில் கேணியடியில் நல்ல சூழ்நிலையில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியுடன் சேர்ந்த ஒரு ஹோலும் ஐந்து அறைகளைக் கொண்டதும், குளியலறை, மலசல கூடத்தோடு சகல வசதியோடும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை நேரில் தொடர்பு கொள்ளவும். தொ.பே: 021 4590503


## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து தெய்வானைப்பிள்ளை

போக்கறுப்பு, முள்ளியானைப் பிறப்பிடமாகவும் குடமியன், வரணியை நிரந்தர வதிவிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து தெய்வானைப்பிள்ளை நேற்று (04.04.2009) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி வைரமுத்துவின் அன்பு மனைவியும் செல்லமுத்து, இராசம்மா, நல்லதம்பி (முகாமையாளர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்), இராசலட்சுமி, கந்தசாமி (பிரான்ஸ்), தேவகுமார், விஜயகுமார், தேவராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வல்லிபுரம், தனபாலசிங்கம், தவமணி, தர்மகுலசிங்கம், ஞானவதி (பிரான்ஸ்), இரத்தினசோதி, அருட்செல்வி, சிவசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை கச்சாய் வீதி, கொடிகாமத்தில் உள்ள மகன் நல்லதம்பியின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2மணியளவில் பூதவுடல் கொடிகாமம் பாலாவித்தாழ்வு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி, கொடிகாமம்.* தகவல்: வ.நல்லதம்பி (மகன்).

### திருமதி முத்தம்மா கந்தசாமி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் இல.10, சட்டநாதர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா கந்தசாமி (03.04.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு கந்தசாமியின் அன்பு மனைவியும் புஸ்பவதி, புனிதவதி, குழந்தைவடிவேல், கோகுலராணி, கவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் நாகேஸ்வரன், ஆனந்தகௌரி, பரமேஸ்வரன், கலாநிதி ஆகியோரின் அன்பு மாமியும் வசந்தா-செல்வகுமார், உதயகுமார் - சாந்தி, சிவகுமார் - றஜனி, வனஜா - சத்தியகுமார், இராகுலன், தோமஸ், அன்ரியா, அபிரா, லயரமணன், நேசராகவன், சங்காயத்திரி, குகநூஜன், கார்த்திகன், கீர்த்தனா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, சட்டநாதர் வீதி,*
*நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.*

தகவல்: திரு.திருமதி க.பரமேஸ்வரன்
(மருமகன் - மகள்).


## யாழ் மாவட்ட மின்பாவனையாளர்களே!

சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!! உங்கள் பிள்ளைகளின் கல்வி மின்வெட்டினால் பாதிப்படைவதை சிந்தியுங்கள்!!!

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் 80% மின்சக்தியை சேமிக்கக்கூடிய ஒரு CFL மின்குமிழையாவது பயன்படுத்தி (400/=செலவு செய்து) பல ஆண்டுகாலமாக நீடித்த மின்வெட்டை புதுவருடப்பிறப்புக்குள் இல்லாது செய்யுங்கள்.

குறிப்பு:- அரசநிறுவனங்கள்,வங்கிகள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குஅதிகூடிய கழிவு விலையில் 20 மாத உத்தரவாதத்துடன் மானிப்பாயில் உள்ள சுந்தர்சன் நிறுவனத்தில் CFL மின்குமிழ்களை 1மாத கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம். 56/15, ஸ்ரான்லி வீதியில் உள்ள NEW ASIAN CENTER ல் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி: Jaffna Technical Institute
45, Clock Tower Road, Jaffna.
021 222 6434, 0718561654


# கமல பாதங்களில் எம் கண்ணீர் மலர்கள்



## நாகலிங்கம் அம்பிகைபாகன்

அன்னையாய், ஆசானாய், அரவணைத்த தோழனாய், ஆலோசனை தந்த மந்திரியாய், மாந்தருள் மாணிக்கமாய், உறவால் சிறிய தந்தையாய் நிழல் தந்த ஆலவிருட்சம் சாய்ந்துவிட்டது.

உள்ளம் ஏற்க மறுத்தாலும் உண்மை அதுதான். அன்புச் சின்னையா ஆலயத்திருவிழாக்களில் எம் ஊரில் தண்ணீர்ப் பந்தல் தந்தவர் நீங்கள். இன்று எம் கண்களில் கண்ணீர்ப் பந்தல் அமைத்தது ஏன்? இடப்பெயர்வு எம்மை இடறிய வேளை இன்முகத்தோடு புகலிடம் தந்து, உணவூட்டி மகிழ்ந்த ஏந்தலே ஏங்கித் தவிக்க எமைவிட்டு மீளாத்துயில் கொண்டதேன்?

சமூக சேவை நீங்கள் எமக்கு ஊட்டிய உணர்வு. மனிதநேயம் நீங்கள் தந்த பாடம். உடைந்த உள்ளத்தோடும் நிறைந்த கண்ணீரோடும் உங்கள் பாதையில் எம் பயணம் தொடரும்.

வாழ்ந்த காலத்தில் வழிகாட்டியாய் திகழ்ந்த நீங்கள், பிரிந்த வேளையிலும் தெய்வமாய் இருந்து எமை வழி நடத்த வேண்டுகிறோம்.

உங்கள் புனித ஆன்மா இராஜராஜேஸ்வரி அம்பாள் அடியில் சாந்திகாண அனுதினம் பிரார்த்திக்கும்

நி.முகவரி:
'பொன்மணி அகம்',
வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை.

திருமதி கதிரவேலு நாகேஸ்வரி குடும்பத்தினர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அசிங்கமான இராஜதந்திரம்!

இலங்கை அரசாங்கம் மீது யுத்தமீறல் குற்றச்சாட்டு சுமத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டதற்காக, ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை



பயங்கரவாதத்துக்குத் துணை போகின்றனர் என்று குற்றம் சாட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வன்னியில் பாதுகாப்பு வலயத்துக்குள் 2800 இற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் குண்டுகள் வீசிக் கொல்லப் பட்டிருக்கிறார்கள், 7000 பேர் காயமடைந்துள்ளனர் என்று தனது அறிக்கையில் கூறியிருந்தார் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

இதேவேளை புலிகள் மீதும் அவர் குற்றச்சாட்டை முன்வைக்கத் தவறவில்லை.

இரண்டு தரப்புகள் மீதும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், இத்தகைய செயல்கள் போர்க் குற்றங்களாகக் கருதப்படத்தக்கவை என்பதையும் நினைவுபடுத்தியிருந்தார்.



இலங்கை அரசாங்கத்தை இந்த அறிக்கை கிலி கொள்ள வைத்தது.

உடனடியாக விழுந்தடித்துக் கொண்டு நவநீதம்பிள்ளையின் அறிக்கை பக்கச்சார்பானது என்றும் அரசின் மீதான அபாண்டமான குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவும் கூறியது இலங்கை அரசு.

வெளிவிவகார அமைச்சின் செயலாளரான பாலித கொஹன்ன கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும் போது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை புலிகளின் ஆதரவாளராக இருப்பார் என்று தான் கருதவில்லை என்றும், அப்படியிருந்தால் அது பாரதூரமான விடயம் என்றும் நாசூக்காக குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

அத்துடன் இந்த அறிக்கை, புலிகளினதோ அல்லது அவர்களினது ஆதரவாளர்களினதோ நிர்ப்பந்தத்தின் பேரில் விடுக்கப்பட்டதாக இருக்கலாம் என்று அவர் ஆரூடம் கூறவும் தவறவில்லை.

இதேவேளை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் கூட, இது புலிகளின் அறிக்கையை ஒத்திருக்கிறது என்று கூறி புலிகளாடு முடிச்சுப் போடப் பார்த்தார்.

ஆனால் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவோ நேரடியாகவே விடயத்துக்கு வந்தார்.

''விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கு ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை துணை நிற்கிறார்'' என்று குற்றம் சாட்டினார்.

''புலிகளுக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் பற்றி உலகத்துக்குத் தெரியப்படுத்த எவரும் முன்வருவ தில்லை. ஆனால் அரசாங்கத்தின் மீது வீண்பழி போடப்படுகிறது. புலிகளின் அறிக்கையை ஒத்ததாகவே ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையும் வெளியாகியிருக்கிறது'' என்பதே அவரது குற்றச்சாட்டு.

அதாவது நவநீதம்பிள்ளை பயங்கரவாதத்துக்கு துணை போகிறவர் என்பதே அவரது கருத்தின் சாரம்.

இந்தக் கருத்தை நியாயப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்னொரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

''ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையும், புலிகளின் இணையத்தள அறிக்கைகளும் பெரும்பாலும் ஒத்துப் போகின்றன. இந்த ஒன்றே சர்வதச நிறுவனங்களில் புலிகள் ஊடுருவியிருப்பதற்குப் போதுமான ஆதாரமாகும். ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை இலங்கையின் இறைமைக்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. ஐ.நாவின் நம்பகத் தன்மையை கேள்விக்கு உள்ளாகி இருக்கிறது'' என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்துகளில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் எத்தகைய விசனத்தைக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

கடந்த காலங்களில் இலங்கையின் நிலவரம் குறித்து ஆய்வு செய்ய வந்த ஐ.நா உயர் பிரதிநிதிகள், ஆணையாளர்கள் கூட இலங்கை அரசாங்கத்தால் விமர்சிக்கப்பட்டிருந்தனர்.

இடம்பெயர்ந்தோர் நலன் குறித்து ஆராயவந்த ஐ.நாவின் உயர் ஆணையாளரையே, புலிகளின் ஏஜெண்ட் என்றும் பயங்கரவாதி என்றும் விமர்சித்தார் அமைச்சர் ஒருவர்.

இப்படிச் சர்வதேச சமூகத்தின் மதிப்பு மிக்க பிரதிநிதிகளை கொச்சைப்படுத்தும், கேவலப்படுத்தும் அநாகரிக இராஜதந்திரப் பண்பாடு இலங்கை அரசுக்கு பழக்கப்பட்டுப் போனதொன்று தான்.

இந்தவகையில் தான் இப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைப் பயங்கரவாதிகளுக்குத் துணை போகிறவர் என்றும் சர்வதேச நிறுவனங்களில் ஊடுருவியிருக் கின்ற புலிகளின் ஆதரவாளர் என்றும் குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு சுமத்தியிருக்கிறது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றி நாடகம் நடத்தி வரும் இலங்கை அரசு இப்போது தனது முகத்திரைகள் கிழியத் தொடங்கியதும் சர்வதேசத்துக்கும் அதன் பிரதிநிதி களுக்கும் பயங்கரவாத முத்திரை குத்தப் பார்க்கிறது.

இப்போது அது ஐ.நா.வையும் விட்டு வைக்கவில்லை. நாளை இதே குற்றச்சாட்டு அமெரிக்காவை நோக்கியோ, இந்தியாவை நோக்கியோ, பிரிட்டனை நோக்கியோ நீளலாம்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு உதவிகளையும் கெஞ்சி நின்று பெற்றுக்கொள்ளும்.

ஆனால், அதைத் தட்டிக் கேட்க எவரும் வரக்கூடாதென்பதுதான் அதன் வழக்கம்.

தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகின்ற போது, சர்வதேசமே வேடிக்கை பார்க்கின்ற கட்டத்தில் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை தமிழ் மக்களை சற்று ஆறுதல் கொள்ள வைத்தது.

உலகம் எமது மக்களின் துயரங் களைப் பற்றி கொஞ்சமேனும் திரும்பிப் பார்க்கிறது என்று அவர்கள் ஆறுதல் கொண்டனர்.

ஆனால் இலங்கை அரசோ இந்த அறிக்கையால் சீறிச் சினந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களை அழிக்கின்ற கொடூரமான போரை மனிதாபிமான யுத்தம் என்று உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது இலங்கை அரசு.

ஆனால் இலங்கை அரசாங்கம் இதுவரை கூறி வந்தவற்றை கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருந்த உலகம் இப்போது கொஞ்சமேனும் விழித்துக் கொண்டு கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளது.



இதைத்தான் இலங்கை அரசாங்கத்தால் பொறுக்க முடியாதுள்ளது. இந்த இயலாமையின், வெறுப்பின் விளைவாகவே இலங்கை அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும், அமைச்சர்களும் ஐ.நா மீதும் மனித



உரிமைகள் ஆணையாளர் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச நிறுவனங்களையும், சர்வதேச சமூகத்தையும் புலிகளாடு தொடர்புடையவை, புலிகளின் அனுதாபிகள் என்று பட்டம் கட்டுவதும் பழிபோடுவதும் இலங்கை அரசாங்கம் ஒவ்வாத இராஜதந்திர முறைக்குள் சென்று கொண்டிருப்பதையே காட்டுகிறது.

## சர்வதேசத்தின் மதிப்புமிக்க பிரதிநிதிகளைக் கேவலப்படுத்தும் அநாகரிகமான பண்பாடு

மாதுமை

*நன்றி: நிலவரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

காரைநகர் சிவன் கோயிலின் திருப்பணி வேலைகள் தொடர்பாக பொதுமக்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி ஆலய மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை முன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஆலய திருப்பணிச் சபை அறிவித்துள்ளது. (204)



## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2009

06.04.2009 (திங்கள்) வசந்த மண்டப பூசை காலை 10.45 மணி

**கொடியேற்றம் நண்பகல் 12 மணி**

13.04.2009 திங்கட்கிழமை

**சப்பறத் திருவிழா மாலை 6 மணி**

14.04.2009செவ்வாய்க்கிழமை

**தேர்த்திருவிழா காலை 9.00**

15.04.2009 புதன்கிழமை

**தீர்த்த்திருவிழா முற்பகல் 10.00**

*ஏனைய காலைத் திருவிழாக்கள் 10.30 மணிக்கும் மாலைத் திருவிழாக்கள் பி.ப. 5.15 மணிக்கும் வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகும்.

*பெருந்திருவிழாவை பிரம்மஸ்ரீ யோ.பிரபாகரக் குருக்கள் அவர்கள் சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசியுடன் நடத்தி வைப்பார்கள்.

*பகல் திருவிழாக்களின் பின் தினமும் கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

கோயில் நிர்வாகம்.

*விளம்பர அனுசரணை:-*

**நியூ பிரியங்கா நகை மாளிகை**

2G,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் T.P:0212225644

# கண்ணீர் அஞ்சலி



## செல்வி கதிர்காமத்தம்பி ராகினி (ஆசிரியை)

பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் பலவும் பெற்று
ஆசிரிய சேவைக்காக
அர்ப்பணிப்புடன் செயற்பட்ட
அன்பான ராகினியே-உமது
அமைதியான தோற்றம்
எம் மனதிலே பசுமையாக
நிலைத்து விட்ட உம் நினைவு
என்றும் எம்மை விட்டு அகலாது
உமது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வ/திருஞானசம்பந்தர் வித்தியாலயம் வவுனியா.

பிரிவால் துயருறும்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 2 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு
01*08*1922



உதிர்வு
05*02*2009

## பொன்னையா பாக்கியலட்சுமி

(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

அன்பால் அரவணைத்து வளர்த்து
அறிவூட்டி
எமது உயர்வுக்காய் அத்தனையும் ஈந்து
ஊனாகி, உயிராகி, உறவாகி நின்றவரே!
பாசச் சுடரே! தங்கள் திதியாகிய இன்று
தங்கள் ஆத்மா சாந்திபெற வண்ணை
வெங்கடேஸ்வரப் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதரியும்,
குடும்பத்தினரும்.


**Study in UK** Apply now New Rules (Tier4)

**BA, BBA, MBA, BSc, MSc,**
After graduation two years workpermit
Universities & College Admission

Certificate Courses | Undergraduate Courses
Diploma Courses | Postgraduate Courses
*and many more courses.....*

Basic Qualification O\L.
IELTS (Optional)

**VISA CONSULTANCY**
*to Any Country, Any Category*
**Fresh, Re Apply, Appeal**
*Filling visa application forms*
Lawyer's Guidance,100% Success Rate

Offer Letter within a day | Student Loan Facilities
Fees payable in instalments | Conditions apply

View our successful clients at www.paranan.com
Official representative of Foreign Universities & Colleges

**Personal Classes**

Computer Courses
- Diploma in Software Engineering(PDSE)
- Diploma in Web Designing & Development(PDWD)
- International Computer Driving Licence (ICDL)
- Diploma in .NET Programming
- Diploma in Java Programming
- Diploma in Computerized Accounting
- Diploma in Multimedia
- Certificate in Microsoft Office Application
- Diploma in Web Designing & Development(PDWD)
- Diploma in Graphic Designing

**GIT, ICT For A/L Students, BIT, BCS**
**Kids Computing, Mothers Computing**

Other Courses
Pre Press Training, Desktop Publishing, Type Setting
Spoken English, Spoken Sinhala
Law Entrance Classes(Tamil & English medium)

ParanaN Associates (Private) Limited
403,1/1 Galle Road, Wellawatte, Colombo-06.
T.P:2551241 Fax:2507932 e.mail: info@paranan.com

Universal College of Education
15/2, Castle Lane, Bambalapitiya, Colombo-04. T.P:2589988
Mobile:0777-370292


## தவறிவிட்டது

பழம் வீதி, கந்தர்மடம் என்னுமிடத்தைச் சேர்ந்த ஆ.நித்தியானந்தன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், முன் இலக்கத்தகடு NPGO 8404என்பன 28.03.2009 சனிக்கிழமை இலுப்பையடிச் சந்திக்கும் அச்சுவேலிக்குமிடையில் தவறிட்டன. கண்டெடுத்தவர்கள் 0212229188 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

கைதடி தெற்கு, கைதடி என்னும் முகவரியுடைய கணபதி குகதாசன் என்பவரது தே.அ.அட்டை [542152370V],விசேட அ.அட்டை [091015183] என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 2.4.2009 அன்று கைதடிச் சந்திக்கும் , கைதடி ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைதடிச் சந்தியிலுள்ள [வர்த்தக நிலையம்] என்னும் கடையில் அல்லது ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்திலோ தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணி விற்பனைக்கு

சுதுமலை வடக்கு, மானிப்பாய் சந்தை வீதியில் அமைந்துள்ள மூன்று (3) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 021 222 6727 அல்லது 0773 144861

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## கடை விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வியாபார ஸ்தலம் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் இன்றி நேரடியாக
தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

**Tel - 011 5672282**

## தேவை

போட்டோப்பிரதி செய்யும்
வேலைக்குப் பெண்கள் தேவை.
(மாநகர சபை எல்லைக்குள்
உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொ.பே: 222 9467
தொடர்பு கொள்ளவும்.

## GODS OWN CHIDREN -(GOC) இன் இலவச தொழிற்பயிற்சி நெறிகள்

உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும் GOC இனால் இலவசமாக வழங்கப்படும் தொழிற்பயிற்சி நெறிகள்.

**தையல் பயிற்சி**

மானிப்பாய், நல்லூர், மந்திகையில் எமது பயிற்சி நெறிக்கு மேற்கூறப்பட்ட தகுதியுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பேக்கரி தொழில் பயிற்சி**

GOC நிறுவனம், ஆனைக்கோட்டை பிரபல பேக்கரியான பூபதி பேக்கரியுடன் இணைந்து மேற்கூறப்பட்ட தகுதியுடைய ஆண்களுக்கும், பெண்களுக்கும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சியினை நிறைவுசெய்யும் மாணவர்களுக்குச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். நேரிலோ/ தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு விண்ணப்படிவங்களைப் பெறவும்.

முகவரி: 140, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5796, 077 4083656,
077 3627055.

(சி/587771)

# 31 ஆம் நாள் நினைவழியா நினைவு தினம்



பிறப்பு: 06.03.1946
இறப்பு: 06.03.2009

## அமரர் சரவணமுத்து சிவபாதசுந்தரம்

திதி:- ஏகாதசி (05.04.2009)

நாடி வந்து கைப்பிடித்து
நலமாக எனை வாழவைத்து-இடையில்
ஓடி எங்கே போய் மறைந்தாய்
என் இனிய காவலனே?
வாடி வதங்கி நானுமிங்கு
வாழும் நிலை கண்டு கொண்டும்
ஓடி மறைந்த உந்தன் செயல்
நியாயம் தானா நீயே சொல்லு?
ஆனாலும்,
பேதையிவள் மனது
உன் ஆத்மா சாந்தி வேண்டி
அன்றாடம் பிரார்த்திக்கும்........
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல:- 37/12, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி (சி.ரதிதேவி).

# மரண அறிவித்தல்

## கதிர்காமு கந்தசாமி

*(ஓய்வுபெற்ற கணக்காளர்- பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம், தெல்லிப்பழை)*



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தசாமி நேற்று (04.04.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் லோகராணியின் (கிளி) அன்புக் கணவரும் அண்ணாமலை-இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் துஷாந்தன் (ஆசிரியர், அல் முபாரத் தேசிய பாடசாலை), துஷாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவராசா, பரமேஸ்வரன், மகேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திராதேவி, சூரியகலா, சந்திரகுமார், சரோஜினிதேவி, சாந்தகுமாரி, தேவகுமாரி (ஜேர்மன்), மேனகா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் சிவலிங்கம் (சவுதி அரேபியா), மகேந்திரம் (வவி), திருச்செல்வம், ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் சகலனும் விமலச்சந்திரனின் (பிரான்ஸ்) மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை, சுன்னாகம்.
தொ.பே.: 0773405643. (84156)

தகவல்:
க.துஷாந்தன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. கூட்டணியில் சலசலப்பு
# ம.தி.மு.க, கம்யூனிஸ்ட்கள் அதிருப்தி;

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவியும் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதாவின் சுபாவம் எவராலும் புரிந்துகொள்ள முடியாத புதிராகவே இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியும் அவருடன் வந்து இணைந்துகொள்ள 'மெகா' கூட்டணி என்று அவரது கூட்டணி புகழப்பட்டது. கலைஞர் விழி பிதுங்கி நின்றார்.

இப்போதோ ஜெயலலிதா தனக்கான புதைகுழியைத் தானே தோண்டுகிறார் போன்று தெரிகிறது.

பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைக்க அவர் மறுத்தபோது அரசியலில் மிகவும் எளிமையான ஒரு விடயத்தைக் கூட அவர் புரிந்துகொள்ளவில்லை என்று தெரியவந்தது. இப்போது வைகோ விடயத்தில் எளிமையானது மட்டுமன்றி அடிப்படையான அரசியல் சூட்சுமத்தைக் கூட அவர் புரிந்துகொள்ளாதிருப்பது வியப்புத்தான்.

உண்மையில் வைகோவுக்கு பாரதிய ஜனதாவுடனோ விஜயகாந்துடனோ கூட்டணி வைப்பது இலகுவான விடயம். எனினும், கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்ததால், அடிக்கடி அணிமாறுபவர் என ராமதாஸ் போல் பெயரெடுக்க அவர் விரும்பவில்லை. மற்றப்படி வைகோவை சிறையிட்டவரே ஜெயலலிதா தான். எனவே, அவரை கைகழுவிவிட்டால் வைகோவுக்கு அது தார்மீக ரீதியான பலமாகும். சமீபத்தில் அவரது கட்சியிலிருந்து மூத்த தலைவர் கண்ணப்பன் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையானோர் விலகி தி.மு.கவில் இணைந்தனர்.



ஜெயலலிதாவின் அணியில் இருந்து வைகோ வெளியேறியிருந்தால் கண்ணப்பன் போன்றோர் வெளியேறுவதை தவிர்த்திருக்கவும் முடியும். நேரடியாக பி.ஜே.பியுடன் அணிசேர்ந்திருந்தால் இன்று பிரசாரம் கூட பாதி முடிந்திருக்கும். விஜயகாந்துடன் கூட வைகோவுக்கு நல்லுறவு உண்டு. பி.ஜே.பி மதவாதக் கட்சி என்றால் அதனுடன் சேராது விஜயகாந்துடன் அணிசேர்ந்திருக்க முடியும். அதையும் வைகோ செய்யவில்லை. ஜெயலலிதாவுக்கு தொடர்ந்து விசுவாசம் காண்பித்தார். அந்த விசுவாசம், நன்றிக்குத் தாம் தகுதியானவர் அல்ல என்பதை ஜெயலலிதா நிரூபித்து வருகிறார்.


தி.மு.க அணியால் தொகுதிப்பங்கீடு முடிந்து பிரசாரமும் தொடங்கி விட்டது. அ.தி.மு.க அணியின் நிலை விசித்திரமாக உள்ளது. கடைசியாக அ.தி.மு.கவில் சேர்ந்த பா.ம.கவுக்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டாகிவிட்டது. கடந்த சட்டசபைத்தேர்தல் காலம் முதல் அ.தி.மு.கவுடன் இருக்கும் வைகோவின் கட்சிக்கு இன்னும் தொகுதிகளை அம்மா ஒதுக்கவில்லை. அம்மாவிடம் இருந்து அழைப்பு வருமென இரண்டு நாட்கள் காத்திருந்த வைகோவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதன் பின்பும் அம்மா பேச்சுக்கு அழைக்காது தன் கீழுள்ள பன்னீர் செல்வத்தை அ.தி.மு.க சார்பில் வைகோவுடன் பேச அனுப்பியுள்ளார். இதனால் வைகோ கடும் அதிருப்தியில் உள்ளார் என்று தெரிகிறது.

கம்யூனிஸ்ட்களின் நிலையோ இதையும் விடமோசமாக உள்ளது. அவர்களுக்கும் அம்மா இன்னும் தொகுதிகளை ஒதுக்கவில்லை. அம்மாவுடன் பேச்சு நடத்தச்சென்ற மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் வரதராஜன் முடிவு எதுவும் இல்லாமல் போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேறினார். கம்யூனிஸ்ட்கள் விஜயகாந்துடன் கூட்டணி வைக்க முயல்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. அக்கூட்டணியில் வைகோவும் சேரலாம் என்றும் ஊகங்கள் நிலவுகின்றன. இச்செய்தி அச்சுக்கப் போகும்போது ஒருவேளை ஜெயலலிதா நிலைமையின் விபரீதத்தை விளங்கிக்கொண்டு கூட்டணியை உடையாமல் பாதுகாத்துக் கொள்ளவும் கூடும்.

எல்லாமே அம்மாவின் கையில்தான் உள்ளது. விஜயகாந்த் - ம.தி.மு.க - கம்யூனிஸ்ட் என மூவர் அணி உண்டாகினால் அது ஒருவேளை அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு அணிகளுக்கும் பாரிய சவாலாக உருவெடுக்கலாம். மாறாக ம.தி.மு.க., பி.ஜே.பி.யுடன் அணிசேரவும் கூடும். மெகா கூட்டணியில் சேர்கிறோம் என ஆரவாரமாகச் சென்று அ.தி.மு.க அணியில் கலந்த பாட்டாளி மக்கள் கட்சி இந்த நிலைவரம் கண்டு வெலவெலத்துப் போயுள்ளது. ம.தி.மு.கவும் பி.ஜே.பியும் இணைந்தால் கடைசி நேரத்தில் அங்கு பா.மா.கவும் சென்று சேரலாம். ஆக தமிழகத்தில் கூட்டணி நிலைவரம் உச்சக்கட்ட குழப்பத்தில் இருக்கிறது. இதற்கான முழுப் பொறுப்பும் ஜெயலலிதாவையே சேரும்.

வைகோ போன்ற ஒரு நேர்மையான அரசியல்வாதி தி.மு.கவை எதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தாலேயே அ.தி.மு.க போன்ற ஒரு சக்தி வாய்ந்த கட்சியிடம் சரணடைய நேரிட்டது. மற்றப்படி பொடாவில் வைகோவை 18 மாத காலம் சிறையிட்ட ஜெயலிலதாவை வைகோ மன்னித்ததால் அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்க தி.மு.க. கூட்டணியிலும் சலசலப்பு



எழுந்துள்ளது. காங்கிரஸுக்கு கன்னியாகுமரி தொகுதி கிடைக்காதது கட்சியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இத்தொகுதி காலாகாலமாக காங்கிரஸ் செல்வாக் குடைய தொகுதியாகும். கடந்த தேர்தலில் தி.மு.க அணியில் காங்கிரஸ் இருந்தபோதும் கம்யூனிஸ்ட்கள் இதைப் பறித்துக்கொண்டனர். இதனால் இம்முறை காங்கிரஸுக்கே கிடைக் குமென எதிர்பார்த்த நிலையில் தி.மு.க கன்னியாகுமரி தொகுதியை தானே வைத்துக்கொண்டது, காங்கிரஸுக்கு கடுங்கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய அளவிலும் இந்த லோக்சபாத் தேர்தல் பல சுவாரஸ்யமான நிகழ்வுகளை சந்தித்துவருகிறது. மேனகா காந்தியின் மகன் வருண் காந்தி மதவெறியுடன் உரையாற்றியது அவருக்கு பெரும் சிக்கலாக மாறியுள்ளது. ஆரம்பத்தில், அவரை பொலிஸார் கைதுசெய்ததை பெரும் நாடகமாக ஆடி அதன் மூலம் இந்து வாக்குகளை கவர பி.ஜே.பி முயன்றது. ஆனால், இப்போது அவர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவாகி இருப்பதால் பி.ஜே.பியின் முயற்சிகள் புஸ்வானமாகி உள்ளன. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள் 3 மாதத்தின் பின்தான் விசாரணைக்கு வரும். அதுவரை பிணையில் வரமுடியாது என்பதே விதி. இதன்படி வருண் காந்தி தேர்தலில் போட்டியிட முடியாது போகுமெனத் தெரிகிறது. வருண் காந்தி இளைஞர். இந்திரா காந்தியின் பேரன், பிராமணர், இந்து மதவெறியர். இப்படி பல சாதகமான விஷயங்களை வைத்து அவரை தேர்தலில் நட்சத்திர பிரசாரகர் ஆக்க பி.ஜே.பி முயன்றது. ஆனால், உத்தரப்பிரதேசத்தின் மாயாவதி அரசு முந்திக்கொண்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரை அடைத்து விட்டது.

இது இவ்வாறிருக்க இந்த தேர்தலில் பல நட்சத்திரங்களும் களம் காண்பது தேர்தல் திருவிழாவுக்கு இன்னும் மெருகூட்டியிருக்கிறது. முன்னாள் இந்திய கிரிக்கெட் கப்டன் மொஹமட் அசாருதீன் கங்கிரஸ் சார்பில் உத்தரப்பிரதேசத்தின் மொராதாபாத் தொகுதியில் களமிறக்கப்பட்டுள்ளார். ஆந்திராவின் ஹைதராபாத் நகரைச் சேர்ந்த இவர் முஸ்லிம் என்பதால் முஸ்லிம்கள் அதிகம் வாழும் உத்தரப் பிரதேசத்தின் தொகுதி ஒன்றில் நிற்பது மிகவும் சாதகமான நிலையாகும்.

இந்தியாவின் 12 கோ்டி முஸ்லிம்களில் ஆகக் கூடிய தொகையினர் வாழ்வது உத்தரப்பிரதேசத்திலேயே ஆகும். அதுவும் மொராதாபாத் பகுதியில் 50 சதவீத முஸ்லிம்கள் உள்ளனர். இதனால் இவர் இங்கு வெற்றி பெறுவது இலகு என காங்கிரஸ் கட்சி கணித்துள்ளது. மற்றொரு கிரிக்கட் வீரர் நவ்ஜோத் சிவ் சித்து. பொற்கோயில் உள்ள அமிர்தசரஸ் தொகுதியில் பி.ஜே.பியின் எம்.பியாக ஏற்கனவே மூன்று தடவைகள் தெரிவானதோடு இம்முறையும் தேர்தலில் போட்டியிடு கிறார். ஹிந்தி நடிகர் சத்ருகன் சின்ஹாவை பீஹார் தலைநகர் பாட்னாவில் தனது வேட்பாளராக பி.ஜே.பி நிறுத்தியுள்ளது. மும்பை நகரின் ஆறு தொகுதிகளில் ஒன்றில் நடிகை நக்மா காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடுகிறார்.

தமிழகத்தில் இப்போது சினிமாவில் கோலோச்சும் இளம் நடிகர் விஜய்யை தனது கட்சிக்காக பிரசாரம் செய்யும்படி தி.மு.க கேட்டு வருகிறது. எனினும், சினிமாத் தொழிலில் இன்னும் இருப்பதால் எவரையும் பகைக்க விஜய் விரும்பவில்லை. அவரது தந்தையும் இயக்குநருமான எஸ். ஏ. சந்திரசேகரன் தீவிர தி.மு.க அனுதாபி. எனவே, அவ்ருக்கு விஜய் தி.மு.க ஊடாக அரசியல் பிரவேசம் செய்வதில் ஆர்வம் உள்ளது என்று தெரிகிறது. ஆனால், கடந்த காலங்களில் எம்.ஆர். ராதா ராதிகா, சரத்குமார், ராஜேந்தர், பாக்யராஜ் போன்ற நடிகர்களை தனது தேவைக்கு பயன்படுத்தி விட்டு தூக்கி எறிந்ததே தி.மு.கவின் சாதனையாக உள்ளது. இந்த வரிசையில் விஜய் சேர்வாரா என்பது தெரியவில்லை. ✱

- எஸ்.சுரேந்திரஜித் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

நவாலி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் திருமதி ஜெ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (204 -100)

## அந்தியேட்டி அழைப்பு



**திருமதி கணபதிப்பிள்ளை இராசேஸ்வரி**

**தோற்றம்: 14. 04.1943**

**மறைவு: 05.03.2009**

கடந்த 05.03.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (06.04.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

சி.கணபதிப்பிள்ளை (கணவன்)
தலைவர் MPCS, உடுப்பிட்டி.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் சண்முகநாதன் ரவிச்சந்தர்**

தோற்றம்: 1965.05.12

மறைவு: 2009.03.05

கடந்த 05.03.2009 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகனின் அந்தியேட்டிக் கிருத்தியமும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (06.04.2009) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள்,
மச்சான்மார்.

பத்தானைக் கேணி,
தொல்புரம்.


**விற்பனைக்கு**

SONY- WEGA KV- BZ 21 FLATRON TV, DVD PLAYER DVP NS 508 P (புதியவை), குசன் செற்றி (வாகை மரம்- 16 குசன்), அலுமாரி (வாகை, தேக்கு ), பிறிஜ் (GENERAL JAPAN), தையல் மெசின் (சிங்கர்), சிங்கிள் பெட், சாப்பாட்டு மேசை, Ladies Bicycle ஆகியன விற்பனைக்கு உண்டு.

TEl : 077 8010452.


## உள்ளூராட்சி சபைகளில் வருமானம் சேகரித்தல் குறித்த பயிற்சி நெறிகள்

நல்லூர், ஏப்.5

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் உள்ளூராட்சி சபைகளின் வருமானம் சேகரித்தல் தொடர்பான பயிற்சி நெறிகள் நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வினை வடமாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவன யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் பத்மினி சிவலிங்கம் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.யோ.சாந்தசீலன் ''வருமான பரிசோதகர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் கடமைகளும் பணிகளும்'' என்னும் தலைப்பிலும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் எஸ்.பாலசுப்பிரமணியம் ''உள்ளூராட்சி சபையின் சட்டங்கள்'' என்னும் தலைப்பிலும், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ''அலுவலக நிர்வாக நடைமுறைகள்'' என்னும் தலைப்பிலும், யாழ்.மாநகர சபையின் சட்ட ஆலோசகர் ஏ.இராஜரட்ணம் ''உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படும் நீதிமன்ற நடவடிக்கைகள்'' என்னும் தலைப்பிலும் தமது கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (06-111)


வசீகரத் தோற்றத்திற்கு

**சந்தனாலேப ஸ்கிரப் கிறீம்**



[குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து]

[illegible]

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO: A/L250.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி ஞானம்பிகை ஏரம்பு**

(இளைப்பாறிய ஆசிரியை மண்டைதீவு)

அன்னையின் மடியில் 27-10-1910

ஐங்கரன் அடியில் 22-02-2009

எமது அன்புத் தெய்வம் சிவபதம் அடைந்த செய்திகேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி, தபால், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், உண்டி கொடுத்து உதவியவர்களுக்கும், 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், 29-03-2009 அன்று பம்பலப்பிட்டி A.V.S மண்டபத்தில் நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினரின் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.

மண்டைதீவு.

# 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் கிருஷ்ணபிள்ளை வரதராஜா (பாபு)

(கிருஸ்ணா, கபே, உரிமையாளர், அச்சுவேலி)



உன்னத வாழ்வு கண்டீர்
உத்தம குணங்கள் கொண்டீர்
அன்புள்ள கணவனானீர்
பாசமுள்ள தந்தையானீர்
பண்போடு எமைக் காத்த தெய்வமே!
31 நாள்கள் சென்றாலும் நாமுள்ளவரை
உமது நினைவுகள் எங்களுடன்

05.04.2009 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு 26.08.1956

உதிர்வு 06.03.2009

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இராஜ வீதி, அச்சுவேலி. (84032)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தெய்வ தரிசனம்



தமது பிறந்த ஊரின் பெயரைத் தமது பெயரின் முன் இணைத்துக் கொண்டு ஈழத்து இலக்கியத் துறையில் பல்வேறு ஆக்கங்களைப் படைத்தவர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

பேராதனைப் பல்கலைக்கழகக் கலைத்துறைப் பட்டதாரி யான இவர் ஆசிரியராகத் தொழில் பார்த்து ஓய்வு பெற்றவர். தற்போது இவருக்கு வயது 75.

ஈழத்து இலக்கியத் துறையில் குறிப்பாக ஈழத்து நாடகத்துறையில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை என்ற பெயரால் அறியப்பட்ட நடராஜா சுந்தரம்பிள்ளை, இதுவரை எழுதிய 60 வரையிலான சிறுகதைகள் ஈழத்தின் பிரபல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

தமிழ் நாடகத்துறையில் மேடை நாடகம், வானொலி நாடகம் மற்றும் ஓரங்க நாடகம் போன்ற பல படிகளிலும் ஏராளமான படைப்புக்களை ஆக்கியவர் இவர். தாம் எழுதிய பல மேடை நாடகங்களைத் தாமே நெறிப்படுத்தி மேடையேற்றிப் பாராட்டுக்கள் பெற்றவர்.

1980 ஆம் ஆண்டு முதல் இவரது பல வானொலி நாடகங்கள் இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பாகியுள்ளன. வானொலி நாடகப் போட்டிகளில் முதல் பரிசில்கள் பெற்றுச் சாதனை படைத்தவர்.

தமது கலைத்துறைசார் பங்களிப்புக்காக கலாபூஷண விருது பெற்றவர். அத்துடன் 'இமயம்' நாடக நூலுக்காக இலங்கை அரசின் சாகித்தியப் பரிசும் பெற்றவர். இவைதவிர, நாவல்கள், இலக்கியக்கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் என்பவற்றினூடாகவும் ஈழத்து இலக்கியத் துறைக்கு நிறையவே பங்களிப்புச் செய்துள்ளார்.

இவரது சிறுகதைத்தொகுதி "யாழ்ப்பாணம்" 1999 இல் வெளியிடப்பட்டது. அக்கரைச் சீமையிலே (1994), ஒரு காதலின் கதை (2001) என்பன இவரது இரு நாவல்கள்.

"தெய்வ தரிசனம்" என்ற தலைப்பிலான இவரது சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

யாழ்ப்பாணம் நியூமார்க்கெட்டிலிருந்து வெளியே வருகிறார் வடிவேலு வாத்தியார். கையில் ஒரு பை. பை நிறையப் பொருள்கள் போலும், சாய்வாக நடக்கிறார். வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது அவரது சைக்கிள். அதில் பையைக் கொழுவிவிட்டால் பிரச்சினை தீர்ந்தது.

அவர் கீழே இறங்குவதற்கு படிக்கட்டின் அருகே வருவதற்கும், எதிரே கார் பார்க் செய்யுமிடத்தில் ஒரு கார் வந்து நிற்பதற்கும் சரியாக இருக்கிறது. காரிலிருந்து ஒரு பெரிய மனிதர் கீழே இறங்குகிறார். அவரது முகத்தைப் பார்த்ததும், அது ஏற்கனவே தமக்குப் பழக்கமானது போல வாத்தியாருக்குப் படுகிறது. எங்கே பார்த்திருப்பேன்?

அந்தப் பெரிய மனிதரும் அடையாளம் கண்டுகொண்டு தம்மை ஒருமுறை பார்த்தது போன்ற பிரமை வாத்தியாருக்கு. ஒரு கணம் தான், அதற்கிடையில் அந்த மனிதரது கவனம் வேறு திசையில் திரும்பி விடுகிறது.

காரில் வந்து இறங்கியவர் சாதாரண மனிதராக இருந்திருந்தால் வாத்தியாரும் அவ்வளவு அக்கறைப்பட்டிருக்க மாட்டார். வந்தவர் கனவான் போலத் தோன்றுகிறாரே! அது அவர் முகத்திலேயே எழுதி ஒட்டியிருக்கிறது. அறிமுகம் செய்து கொள்ளும் வாய்பைத் தவறவிடலாமா?

மூளையைக் குடைந்து, குடைந்து பார்த்ததுதான் மிச்சம் பயனில்லை. வயது நாற்பத்தைந்தைத் தாண்டிவிட்டது. வாத்தியாருடைய ஞாபகசக்தி இப்பொழுதெல்லாம் சுறு சுறுப்பாக இயங்குவதில்லை. சிறிது நேரம் மூளையுடன் போராடிய பின்பே சில விஷயங்கள் ஞாபகம் வரும். சில வரவே வரா! "அட தருணத்தில் சதி செய்கிறதே சனியன்"வாத்தியார் திட்டிக் கொள்கிறார், தன் மூளையைத் தான்.

பளிச்சென்று ஒரு மின்னல் வெட்டு, மூளையில்,

வடிவேலு வாத்தியார் சில வாரங்களுக்கு முன்புதான் பதவி உயர்வுக்காக இன்ரவியூவுக்குச் சென்றவர் கொழும்புக்கு. அங்கு மேசையில் மறு பக்கத்தில் இருந்து அவரை 'இன்ரவியூ' செய்த அதிகாரிகளில் அந்தக் கனவானும் ஒருவர்.

'நல்ல நேரத்தில் ஞாபகம் வந்தது!கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. எப்படியும் அவரை அறிமுகம் செய்துகொள்ள வேண்டும், அடுத்த முறை அவர் இந்தப் பக்கம் பார்வையைத் திருப்பும்போது ஒரு புன்சிரிப்புப் போட்டு வைப்பம்'.

சிரிப்பதற்குத் தயாராக நிற்கிறார் வாத்தியார். ஆனால் அந்தக் கார்க் கனவான் அவர் பக்கம் திரும்பினால்தானே!

கொழும்பில் கல்விக் கந்தோர் அறையில் தாம் பார்த்த அதிகாரி யாழ்ப்பாணத்தில் நடு றோட்டில் தம் கண் முன்னால் நின்ற காட்சி, வரங் கொடுக்கும் தெய்வமே பக்தனைத் தேடிப் பூமிக்கு வந்து விட்டதைப் போன்ற உணர்வைக் கொடுக்கிறது வாத்தியாருக்கு. அந்த அதிகாரி தமிழரா, சிங்களவரா, முஸ்லீமா என்பதெல்லாம் அவருக்குத் தெரியாது, வரங் கொடுக்கும் தெய்வம் ஒன்று அகப்பட்டுக் கொண்டது. அதனுடைய கவனத்தை எப்படியும் கவர வேண்டும்!

வடிவேலு வாத்தியாருடையது இருபது வருடக்கதை. இவ்வளவு நீண்ட காலமாக வாத்தி வேலையில் இருந்து அலுத்துப் போனவர். "இனி ஏதாவது புறமோஷன் வந்தாச் சரி, இல்லாட்டா இந்தத் தொழிலை விட வேண்டியது தான்". இது அவர் அடிக்கடி தமது சக ஆசிரியர்களுக்குச் சொல்லும் வாக்கியம். ஆனால் அந்த வேலையை விட்டு விட்டு, என்ன செய்யலாம் என்பது அவருக்குத் தெரியாது. தமக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மற்றவர்களும் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகவே, அவர் இந்த வசனத்தை அடிக்கடி உதிர்ப்பார்.

அப்படிப் பெரிய பதவிகள் ஒன்றிலும் அவருக்கு ஆசை இல்லை. கிறேட் ஃபைவ் ஆனாலும் பரவாயில்லை. ஒரு சின்னப் பிறின்சிப்பல் பதவி! இதுதான் அவரது இலட்சியம், சிறு குக்கிராமப் பாடசாலை என்றாலும் பரவாயில்லை, பிறின்சிப்பலாக வேண்டும்!

பதவி உயர்வுபற்றி அவர் கனவுகளும் காண்பதுண்டு. பகற் கனவுகள், இரவுக் கனவுகள் இரண்டும் தான். அவர் அதிபராக வருவதாகவும், சக ஆசிரியர்கள் அவருக்கு மரியாதை செய்வதாகவும், பிள்ளைகள் அவருக்கு அடங்கி நடப்பதாகவும், பெற்றோரும் ஊரவர்களும் அவர் புகழ் பாடுவதாகவும், அவற்றில் காட்சிகள் மாறி மாறி வந்து கொண்டிருக்கும்.

தமக்குப் பிறின்சிப்பல் வேலை பார்ப்பதற்கு வேண்டிய மனப்பாங்கு இருக்கிறதா? தம்மால் ஒரு பாடசாலையைக் கட்டியாள முடியுமா? கல்வி அதிகாரிகள் சொல்வதற்கெல்லாம் தாளம் போட்டு, எம்.பீ.க்களுக்கு வால் பிடித்து, ஆளும் கட்சியமைப்பாளர்களைத் தேடி நாயாக ஓடி..... இந்தத் திறமையெல்லாம் தமக்கு உண்டா என்றெல்லாம் வடிவேலு வாத்தியார் அவ்வளவாகக் கவலைப்படுவது கிடையாது. இத்தனைக்கும் பிறின்சிப்பலாக வந்தவர்கள் சிலர் படும் அவஸ் தைகளையும், அவலங்களை யும் அவர் தமது கண்ணால் பல முறை கண்டி ருக்கிறார். இருந் தாலும் ஆசை விடுகிறதா? பிறின்சிப்ப லாக வந்தாற் போதும்!... மற்றவை பிறகு...

கல்வி அதிகாரிகள் பலருடைய பெயர்கள் வாத்தியாருக்கு மனப் பாடம். இதிலெல்லாம் சிறிது, பெரிதென்று




பாகுபாடு காட்டுவதில்லை வாத்தியார். எல்லா அதிகாரிகளுக்கும் சம அந்தஸ்தே வழங்கியிருந்தார், பெயர் பாடமாக்கும் விஷயத்தில். ஒரு நாள் ஒரு தரமாவது அந்த அதிகாரிகள் ஒருவரின் திரு நாமத்தை அவர் உச்சரிக்காமல் விடுவதில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

# அருட்சுவையும் தமிழ்ச் சுவையும் பொழியும் அப்பரடிகளது திருமுறைப் பாடல்கள்; இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்களுக்கு வழிகாட்டியவை அவரது தேவாரப் பதிகங்கள்

## தமிழோடு இசைபாடல் மறவாது சமயத் தொண்டாற்றிய சங்ககாலச் சமயகுரவர்கள் பலர்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களாகிய பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றவர்களின் உணர்ச்சிப் பாடல்களை நாம் அறிவோம். தமிழ் மொழிமீதும், தமிழ்ப் பண்பாட்டின்மீதும், தமிழ் இனத்தின் மீதும், தன்மானத்தின்மீதும் எழுந்தவை இந் நூற்றாண்டுக் கவிகள். இதற்கு ஓரளவு வழிகாட்டியவர்கள் அப்பர் சுவாமிகள் என்றழைக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் எனலாம். சரித்திரத்திலேயே புதுமைப் புரட்சி, சீர்திருத்தம் என்பவற்றை அறியாத காலத்தில், சமய வாழ்வு வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனார் இதனைச் செய்தார்.

தீய்ந்தமிழ் இனிய தமிழ். அது செவிக்கு மாத்திரம் இனிமை கொடுப்பதல்ல. உயிருக்கும் உணர்வூட்ட வல்லது. அப்பருக்கு அஞ்ஞான்று பயன்கொடுத்தது போல், கற்போர்க்கு எஞ்ஞான்றும் பயன்கொடுக்கும் தன்மை கொண்டது தீந்தமிழ். அப்பர், அல்லற்பட்ட நேரத்தில் இன்தமிழ் பாடி உய்தி அடைந்தார். கடுமையாக வருத்திய சூழ நோயை நீக்கியது அவர் நினைத்த தமிழ். மத யானையை அடக்கியது அவர் பாடிய தமிழ். அவர் துன்புற்ற நேரத்திலே, அவர் தம் நெஞ்சத்தில் எழுந்த பாடல்களிலே தீன்தமிழின் இனிமையை நாம் காணலாம்.

பல்லவ மன்னவன் தூதுவரை விட்டு அழைத்தபோது,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்........" என்று பாடி, வீரத்தை வெளிப்படுத்தியவர் இப் பெரியார்.

அது மாத்திரமன்றிப் பட்டத்து யானையை ஏவிவிட்டபோது,

"அஞ்சுவதுமில்லை! அஞ்சவருவதுமில்லை"
என அஞ்சாது கருத்துக்களை முன் வைத்தார்.

மேலும் இவர் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள் மிகச் செறிந்தும், சிறந்தும் காணப்படுகின்றன.

சாத்திரமும் கோத்திரமும் பேசிப் போலி வாழ்க்கை வாழ்பவர்களை மிக நயமாகச் சாடுகிறார் அப்பரடிகளது பின்வரும் பாடல் இதனைக் காட்டுகிறது.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங்கொண்டு என்செய்வீர்
பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே"

எங்கும் இறைவன் உள்ளான் என்ற உண்மையை உணராவிட்டால் கங்கைத் தீர்த்தத்தில் அல்லது காவிரித் தீர்த்தத்தில் ஆடினாலும் பயன் எதுவும் கிட்டாது என்பது அவர் கருத்து. பெண்களைப் போற்றாத எந்தச் சமயமும் முழுமையானதன்று என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இவருடைய பாடல்களில் அம்மை அப்பனுடைய இணைப்பு மிகுதியாகக் காணப்படுகின்றது. கயிலைக் காட்சியைத் திருவையாற்றிலே கண்ட அப்பரடிகள்:

"காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்"

என்ற அடியில் அவ்வுண்மையை வெளிப்படுத்துகின்றார்.

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்ற வாக்கிற்கேற்ப பல பாடல்களில் சிறந்த உவமையும், நகைச் சுவையும், அகப் பொருட் செறிவும் நிறைந்து காணப்படுகின்றன.

"பாம்பின் வாய்த் தேரைபோல
பலபல நினைக்கின்றேன்" என்றும்,
"திளைத்துநின் றாடுகின்ற ஆமைபோற்
தெளிவி லாதேன்" என்றும்,
"ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
முடிவைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே" என்றும்,
"இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாயே"

என்றும் உவமைகள் காட்டி, உலக வாழ்வின் சிறுமையை அருமையாகப் புலப்படுத்துகின்றார். மற்றோர் இடத்தில் நகைச் சுவை ஒன்றைக் காண்போம்.

திருவொற்றியூர் சிறந்த ஒரு திருத்தலம். இத்தகைய திருத்தலத்தை நீ ஒற்றியாக வாங்கிவிட்டாய். உனக்கு ஒற்றி தந்தவர்களது பரம்பரையில் இப்பொழுது ஒருவருமில்லை. இதை நினைத்து நீ அந்த ஊரை விற்று விடாதே. சுவாமீ! இப்படி ஓர் ஊர் உனக்குக் கிடையாது என்று நயமாக இறைவனோடு பேசுகின்றார்.

"சுற்றி வண்டு யாழ்செயும்
சோலையும் காவும் துதைந்திலங்கு
பெற்றி கண்டார் மற்று
யாவருங் கொள்வர் பிறரிடை நீ
ஒற்றி கொண்டாய் ஒற்றியூரையும்
கைவிட்டு உறுமென் றெண்ணி
விற்றி கண்டால் மற்றிது
வொப்ப தில்லிடம் வேதியனே"

சுவாமிகளின் பாடல்களில் அகப் பொருட் சுவையையும் சிறப்பாகக் காணலாம். தமிழிலக்கியத்துக்கு வளமூட்டுவது அகப் பொருட் சுவையாகும். சங்க இலக்கியங்களில் இந்தச் சிறப்பைக் காணுகின்ற எமக்குத் திருமுறைகளுடன் இணைத்துக் காணும் பொழுது அவை அருட்சுவையையும் தமிழ்ச் சுவையையும் தருகின்றன. "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற பாடலில் பக்குவமுள்ள தலைவியாக ஆன்மாவை வைத்துப் பாடியுள்ள சிறப்பைக் காணுகின்றோம். மற்றொரு பாடலில் தலைவனிடத்தில் கொண்ட காதலால் தலைவியின் மெலிவும், கைவளையல்கள் கழன்று விடக் கூடியதான நலிவும் ஏற்படுகின்றதென்பதை இறைவனாகிய தலைவனிடத்திலும் பக்குவமுள்ள ஆன்மாவாகிய தலைவியிடத்திலும் வைத்து அகப் பொருட் சுவை மிளிரப் பாடியுள்ளார்.

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான்
வாரானே ஆயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய
அழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற
சேவடியாய் கோடியையே"

இவ்வாறு அப்பர்சுவாமிகளின் அருந்தமிழ்ப் பாடல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பைப் பெறுகின்றன என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. ❋

*(நன்றி:சிவத்தமிழ் இன்பம்)*

## இனத்தின் அடையாளம் பேணுதல் முக்கியம்

கழுத்தையுங் காதையும் மூடிக்கொண்டு - கன
கச்சிதமாகவே "ரை"யுங் கட்டி
நீளக்கைச் சட்டையும் போட்டுக் கொண்டு - வெளி
நாடதன் சூழலில் வாழுகின்றார்

கல்விச் சுற்றுலாவிற் செல்வதற்கு - நல்ல
பாதுகாப்பு முறை சொல்லி வைப்பர்
மாசு படாது நீ வாருகவே - என்று
கல்விக் கூடத்திற்கு அனுப்புகின்றார்

மனைவியுங் கணவனும் மாறிமாறி - அங்கே
மாற்றுத் திருமணஞ் செய்தாலும்
ஏனென்று எவருமே கேட்பதில்லை - அதை
ஈனமாகவும் நினைப்பதில்லை

பிள்ளையை நல்வழிப் படுத்துதற்கு - பெற்றோர்
கிள்ளி நுள்ளி யங்கே அடித்தாலும் சரி
துள்ளிப் பொலிஸாரும் வந்திடுவார் - அவரை
அள்ளிச் சென்று தண்டம் விதித்திடுவார்

சிறுவர் உரிமையும் மனித உரிமையும்
சீராக அங்கே நடக்குதென்றும்
இங்குள்ளோர் அவ்விதம் நடந்திடவே வேண்டி
எதனையும் செய்யும் நிதி உதவி தாறார்

தங்களின் பிள்ளையை எங்களின் பெற்றோர்கள்
தங்கங் களாகவே வளர்த்து நிற்க
இந்தக் கலாசாரம் எங்களின் பின்னோரை
என்னதான் செய்யுமோ யாரறிவார்?

சுவெற்றரோ கோடைக்கு உதவாது - என
குளிர் நாட்டினருமதைத் தவிர்ப்பாரன்றோ
எங்களின் கலாசாரத்திற் கேற்ற வகையினில்
இங்கிவர் தரு(சொல்)வதை ஏற்றிடுவோம்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
புதுயுகம் படைப்பதில் வழுவல்ல,
எது எமக் கெப்படி என்ன செய்யுமென்று
பொதுமையை ஏற்றுப் புதுமை செய்திடுவோம்!

- *கவிமணி அன்னைதாஸன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மூலிகைத் தாவர இனங்களைத் தவறாது இனம் பெருக்கிப் பாதுகாக்க வேண்டியது உடன் தேவை

சித்த வைத்தியம் தொடர்பான ஆய்வுகளுக்குப் பொருத்தமான - இன்றைய காலத்துக்கு அவசியமான தலைப்புக்களைத் தேடிக் கண்டு ஆய்வுகளை நவீன சித்தர்கள் மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையென இக் கட்டுரைத் தொடரின் 05 ஆம் பகுதியில் வலியுறுத்தியிருந்தேன்.

அந்த வகையில் பயனுள்ள மூலிகைத் தாவரங்கள் குறித்தும் அவற்றின் இயல்புகள், மற்றும் பயன்பாடுகள் குறித்தும் இத் தொடரில் ஆராய்தல் பொருத்தமானதாக அமையும்.

**இயற்கையின் வரப்பிரசாதம்**

மூலிகைகளெல்லாம் தாவரங்களே! ஆனால் தாவரங்களெல்லாம் மூலிகைகளல்ல என வாதிடுவார் ஒரு சாரார். ஆனால் ஒவ்வொரு தாவரத்திற்கும் ஏதோ ஒரு வகையில் சிறப்பியல்பு இருக்கும். அதுவே அத்தாவரத்தில் இருக்கும் தனித்துவத்தன்மை ஆகும். ''அங்கிகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம்'' என அழகாகக் கூறியிருக்கிறார்கள். அந்தச் சிறப்பை, சிறப்பிற்குரிய இரசாயன சேர்க்கைகளை நாம் அறிந்து கொண்டால் அவற்றினைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

மூலிகை குணமுள்ளவை என அழைப்பதற்கு அடிப்படைக் காரணம் அத்தாவர பாகங்களில் செறிந்து காணப்படும் இரசாயனச் சேர்க்கைகள் அல்லது இரசாயன மூலக்கூறுகளாகும். இவ்வாறான இரசாயனச் சேர்க்கைகள் இம் மூலிகைத் தாவரங்களில் நோயெதிர்ப்பு, பீடையெதிர்ப்பு மற்றும் மாறிக்கொண்டிருக்கும் சூழல் காரணிகளினை தாங்கி, எதிர்த்து அல்லது மாற்றத்திற்கேற்ப இயைந்து தப்பிப் பிழைப்பதற்கான பொறிமுறைகளாக இருக்கின்றன. இந்த அதிசயத்தை அனுபவமூடாக பட்டறிந்தவர்கள் அக்காலத்துச் சித்தர்கள். இரசாயன சேர்க்கைகளின் ஒத்த, ஒவ்வாத தன்மைகளைக் கூட துல்லியமாகக் கணக்கிட்டு கூட்டுச் சேர்த்து சித்த வைத்திய முறைகளைப் பரிகரிக்கும் மருந்துகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதனாலே ''பத்தியம்'' என உணவு உட்கொள்வதனை ஒழுங்கமைத்திருக்கிறார்கள்.

இரசாயனங்களின் அடிப்படை இயல்புகளை அளவறிந்து, அமைப்பறிந்து அதன் மூலமாக விதம், விதமான உலோகங்களைத் தூய்மைப்படுத்தி மூலிகைகளுடன் கலந்து தயாரிக்கப்படும் மருந்துகளை சித்த வைத்தியத்தில் காணலாம். அவ்வாறாயின் சித்தர்களின் யோக நிலைகளுக்கூடாக இரசாயனக் கலவைகள், தாக்கங்கள் பற்றிய தெளிவான அறிவு இருந்திருப்பதன் சிறப்பை அறியும்போது வியப்பாக இருக்கிறதல்லவா!

மூலிகைகள் இறைவனால் எமக்குத் தந்தருளப்பட்ட வரங்களில் ஒன்று. அவை இயற்கையன்னையின் வரப்பிரசாதங்கள். இவற்றை நாம் எந்தளவிற்குப் பயன்படுத்துகிறோம்? எமது அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம்? இன்னொரு வகையில் கூறினால் மூலிகைகளே உணவாக, உணவே மருந்தாக ஆகியிருக்கின்றதல்லவா!

இந்தக் கருத்துக்கு உடன்பாடில்லாத சித்தர்களும் இருக்கின்றார்கள். வெறும் சுகாதாரப் பழக்க வழக்கங்களும் உணவும், மருந்தும் நோய்க்குப் பதிலளிக்க முடியாது என்பதும் நோயைக் கட்டுப்படுத்தி, விலக்கி அழித்துவிடுவதென்பது அவரவர் நடைமுறையைப் பொறுத்தேயுள்ளது என்பதும் அவர்தம் வாதமாக இருக்கிறது. இதுவும் ஒருவகையில் பொருத்தப்பாடானதே என்கிறீர்களா! நடைமுறை என்பது முழுமையான பழக்க வழக்கத்தை, வாழும் சிறப்பை, நல்ல சிந்தனையை, எண்ணங்களை, சமூகப் பொறுப்புணர்வைச் சுட்டி நிற்கின்றது.

**இயற்கையைப் பற்றி என்ன தெரியும்?**

இயற்கையன்னையைப் பற்றி முழுதாக அறிந்துகொள்ள விஞ்ஞானம் முனைந்தாலும் அந்த இயற்கையைப் பற்றி எமக்கு என்ன தெரியும்? இந்தக் கேள்விக்குப் பலரும் இன்னும் விடை தேடிக் கொண்டிருக்கிறார்கள். அடியும் முடியும் தேடியவர்கள் கதையாகத் தேடத் தேடப் புதிது புதிதாக வந்து கொண்டேயிருக்கிறது. இயற்கையின் அதிசயம் இது.

**மூலிகை இயல்பு - நஞ்சாக - அதுவே மருந்தாக - அதிலும் உணவாக**

மூலிகைத் தாவரங்களில் இருக்கும் அநேகமான இரசாயனச் சேர்வைகள், நுண்ணங்கிகள் மற்றும் கிருமிகளுக்கு நஞ்சாக அவற்றை எதிர்க்கும் அல்லது அழிக்கும் திறன் கொண்டவையாகக் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறான நஞ்சு தோலில் காணப்படுவதும் உண்டு. உதாரணத்திற்காக மரவள்ளிக் கிழங்கின் தோலிலிருக்கும் சயனைட்டு இரசாயன பதார்த்தமும் அல்லைக் கிழங்கின் தோலிலிருக்கும் டயஸ்கோரின் எனும் பதார்த்தத்தையும் குறிப்பிடலாம். இதனால்தான் இக் கிழங்குகளில் பூச்சிப் பீடைத் தாக்கம் இருப்பதில்லை.

**மூலிகை - தாவரத்தில் இரசாயன பதார்த்தம் பூச்சி விரட்டி அல்லது பூச்சி நாசினியாக**

தாவரங்களில் காணப்படும் இரசாயனப் பதார்த்தங்களின் சிறப்பியல்புகள், பூச்சி விரட்டி அல்லது பூச்சி நாசினியாக ஆதிகாலந்தொட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வேம்பில் காணப்படும் அசாடிராக்ரின் (AZADIRACTIN) மற்றும் நிம்பிடின் போன்ற இரசாயனச் சேர்க்கைகளும், செவ்வந்தியில் இருக்கும் பைரித்திரின் (PYRITHIRIN) எனும் இரசாயனமும் புகையிலையிலுள்ள நிகொட்டின் (NICOTIN) இரசாயனமும், இவற்றுக்கு உதாரணங்களாகின்றன. இவ்வாறான இரசாயன இயல்புகள், பூச்சிப் பீடைகளைப் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப் படுகின்றன. இச் சேர்வைகள் நீரில் இலகுவாகக் கரையும் திறனுடையனவாயிருப்பினும், அவற்றின் அளவு தாவர பாகங்களில் மிகச் சொற்ப அளவிலேயே இருக்கும். அதனை இனங்கண்டு தேவையான அளவில் பயன்படுத்தும்போது இவ்விதமான நஞ்சு இரசாயனங்கள் மருந்தாகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. அந்த அளவைச் சித்த வைத்திய முறைகளில் துல்லிய மாகக் கணக்கிட்டுப் பயன்படுத்தியிருக்கும் சிறப்பே தனி.




தாவரங்களில் காணப்படும் இவ்வாறான தாவர இரசாயனச் சேர்வைகள் (Botanical Pesticides) பூச்சி நாசினியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பூச்சி நாசினிகளின் ஆரம்பமே இவ்வாறான தாவர இரசாயனங்கள் தான்.

நம் மூதாதையரின் செயல் இங்கு நினைவு கூரத்தக்கது. நெல் அறுவடை செய்தபின், அதனைக் காயவைத்துச் சேமிப்பதற்காக மரத்தினாலான ''பத்தாயம்'' கொள்கலனில் இடும்போதும், நெல்மூடைகளைச் சேமிப்பு அறையில் அடுக்கி வைக்கும் போதும் நொச்சி, வேம்பு மற்றும் பன்னை ஆகிய தாவரங்களின் இலைகளைப் பறித்து வந்து பரப்பி விடுவர். இவற்றின் மணத்திற்கு, நெல்லில் முக்கிய சேமிப்பறைப் பீடையான 'நெல் அந்துப் பூச்சி' விரட்டப் பட்டுவிடும். (Repellant Action)பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்த அசேதன இரசாயனங்களைப் பயன்படுத்தாது இயற்கை முறையில் தாவரப் பொருள்களைக் கொண்டு பீடைகளை முகாமைப்படுத்துதல் சேதன விவசாயத்தின் மிக முக்கிய அம்சமாகின்றது. இந்த வழி இதற்கான ஒரு வழியாக விவசாயபீட ஆய்வுகள், அணுகுமுறைகள் சித்த வைத்தியத் துறையுடன் இணைகின்றது.

இன்னொரு வகையில் சிறந்த சுகாதாரமான உணவை உற்பத்தி செய்தலில் இரு முறைகளும் இணைகின்றன. சுகாதாரமான நஞ்சற்ற பயிரை உற்பத்தி செய்தல் ஒரு பக்கத்திலும், விளைவித்த பயிரிலிருந்து சுகாதாரமான தூய்மையான உணவைப் பெறுதல் இன்னொரு பக்கத்திலும் அமைகின்றன.

**மூலிகைத் தாவரத்திலிருந்து தாவர இரசாயனங்கள் நுண்ணுயிர் கொல்லிகளாக**

மூலிகைத் தாவரச் சாறுகள் மற்றும் அவற்றினது பாகங்கள் நுண்ணுயிர் கொல்லிகளாக இருக்கின்றன. இவற்றை இனங்கண்டு பயன்படுத்துவது அவசியமாகும். நுண்ணுயிரிகள் எனக் கூறும்போது அவை மனிதனுக்கு அல்லது வளர்ப்பு மிருகங்களுக்கு நோயை ஏற்படுத்துவனவாக இருக்கலாம். அல்லது உற்பத்தி செய்யும் பயிர்களில் நோயை ஏற்படுத்து வனவாக இருக்கலாம். இவற்றின் பயன்பாடு இன்னும் முழுமை பெறவில்லை. ஆய்வுகள் அனைத்துப் பக்கங்களிலும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. இக்கால சித்தர்களும் விரும்பி இதில் இணைந்து கொள்ளலாம்.

**மூலிகைகளின் செறிவு மற்றும் பரம்பல்**

உலகளாவிய ரீதியில் தாவர இனங்களாக கிட்டத்தட்ட 1.7 மில்லியன் தாவர இனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் அந்தக் கணக்கு மிகவும் குறைவானதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. தாவர இனங்களின் செறிவு 3.25 மில்லியனிலிருந்து 1.4 மில்லியன் வரை இருந்தும்இதுவரை இனங்காணப்பட்டவை ஒரு குறிப்பிட்டளவே ஆகும். மிகுதியானவற்றை இனங்காண விஞ்ஞானம் முயன்று கொண்டிருக்கின்றது.

குறிப்பிட்ட மனித நோய்க்கென ரிஷிகளால் இனங்காணப்பட்ட தாவரங்களுடன், சித்தர்கள் (Siddhas) , தன்வந்திரியர்கள் (Dhanvanthiries), மூலவர்கள் (Moolavars), நாகர்ஜூனர்கள் (Nagarjunas) ஆகிய தரப்பினர்களுடன் விவசாயிகளும் இணைந்தே மூலிகைகளை அவற்றின் குறிப்பிடத்தக்க புற இயல்புகளை வைத்து இனங் கண்டார்கள். இந்தியாவிலும் இவ்வாறாக மூலிகைகளின் செறிவும் பரம்பலும் இருந்திருக்கின்றது. இன்னும் இருக்கின்றது. இவை எல்லாவற்றையும் பனையோலையில் ஏடுகள் செய்து ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறாக ஆவணமானவை நூலுருவிலும் ஒருசில CD தட்டுக்களிலும் மீள் பதிக்கப்பட்டுள்ளன.

**சித்தர்கள் சுயநலவாதிகளல்லர்**

இயற்கை வைத்தியத்தைச் செய்யும் சித்தர்களை சுயநல வாதிகளாக இனங் காணுவது சரியானதல்ல. இங்கே ஒரு சோறு ஒரு பானை சோறாகாது. பரம்பரை மருத்துவத்தை முறையாகக் கடைப்பிடிக்கும் இவர்கள் குறிப்பிட்ட மருத்துவ முறையை இரகசியமாக வைத்திருப்பது அவர்களது தொழில் முதலீடு ஆக இருப்பதால் நாங்கள் அத்தகைய குறுகிய வட்டத்திற்குள் முற்றும் துறந்த சித்தர்களை அடக்கக் கூடாது. அவர்களது பொதுச்சேவை பற்றியும், சமூகக் கடப்பாடு மற்றும் பொறுப்புணர்வு மூலமாகத் தமது மருத்துவ முறைகளை ஏடுகளில் எழுத்தாணி கொண்டு எழுதி வைத்திருப்பதிலிருந்து இது தெரியவில்லையா? ஒரு பானை சோற்றில் ஒரு சோறு கறுப்பு என்பது போல எங்கோ ஓரிரு தற்கால சித்தர்கள் தங்களையறியாது 'குறுகிய வட்டத்திற்குள் சென்றுவிடுவதை இங்கு குறிப்பிட வேண்டி வந்துவிட்டது.

இயற்கை தந்த மூலிகைகளைச் செயற்கையாக உற்பத்தி செய்யும் போது, அவற்றிலுள்ள மருத்துவ குணம் நலிவடைந்து விடுகின்றது என்ற கூற்று சரியானதே. தானாக மலையிலே வளர்ந்த மூலிகைகளைக் கிள்ளியெடுத்தே சித்தர்கள் பரிகரித்திருக்கிறார்கள். ஆனால் மூலிகை இதுவென அறியாமல் பரிகரிக்கும் இக்காலப் போலி சித்தர்களும் இருக்கிறார்கள். இதனால் சித்த ஆயுள்வேத மருத்துவத்தை அத்தகையோர் போலியாக்கி விடுகின்றனர்.

இதிலிருந்து மூலிகைகளின் சரியான தெரிவிலும் அவற்றைச் சரியான அளவில் பயன்படுத்துவதிலுமே சித்த ஆயுள் வேத வைத்தியத்தின் பலம் இருக்கின்றது. மேலைத்தேய மருத்துவத்திற்கும் சுதேச மருத்துவத்திற்கும் இடையிலான கருத்து முரண்பாடு மூற்றியிருக்கும் இவ்வேளையில், இவ்விரு மருத்துவ முறைகளுக்குள்ளும் இயலாமைகள், சிறப்புத்தன்மைகள் இன்னும் கூறினால் அதிசயங்கள் கூட நிகழ்ந்திருக்கின்றன; நிகழ்த்தப்படுகின்றன. இதில் குறைகளாக நோயைச் சரியாக இனங்காணுதல், நோயின் தன்மை, வீரியம் இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம். இரு மருத்துவ முறைகளிலும் உள்ள இயலாமையினை வெளிப்படையாக ஒத்துக் கொண்டால், ஒன்றுடன் மற்றையதைத் தொடர்புகொள்ள வைத்தால் ஒவ்வொன்றினதும் பயன்பாட்டை முழுமையாக நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

**மூலிகைளின் பாவனை**

உலகளாவிய ரீதியில் நான்கில் ஒரு பங்கு மருத்துவப் பரிந்துரைப்புகள், இரசாயனச் சேர்வைகளாக அல்லது தாவரத்திலிருந்து எடுக்கப்பட்டவையாக இன்னும் நுண்ணங்கிகள் மூலம் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்டவையாகும். இந்தியாவில் பரம்பரை வைத்தியர்கள் 2 ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான மூலிகைகளையும் சீன மக்கள் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மூலிகைகளையும் பயன்படுத்துகின்றார்கள். எங்களூர் கணக்கு சரியாகக் கிடைக்கவில்லை. விவரம் தெரிந்த சித்தர்களிடமிருந்து இது பற்றிய விவரத்தை ''இந்தப் பகுதி'' எதிர்பார்த்திருக்கின்றது.

ஆதிகாலத்திலிருந்து மூலிகைப் பயன்பாடு பற்றி, குறிப்பாக மனிதனது நோய்தீர்க்கும் மருந்தாக இருந்தவை பற்றி அறிந்தவற்றிலிருந்து , இருக்கு வேதத்தில் (5000BC) 67 மூலிகைத் தாவரங்களும், யதுர் வேதத்தில் 81 மூலிகைகளும், அதர்வ வேதத்தில் (4500 - 2500BC) 290 மருத்துவ தாவரங்களும் பயன்படுத்தப்பட்டதாக எழுதி வைத்திருக்கிறார்கள். வரலாறு சொல்லும் மூலிகைப் பயன்பாடு பற்றி இனி எழுதப்போகும் வரலாறு என்ன சொல்லப்போகிறது. ஆர்வமுள்ளோர் உங்களது அனுபவத்தை மற்றையவருடன் பகிர்ந்து இனிவரும் வரலாற்றில் இணைந்து கொள்வீர்களா?

**எங்களூரில் மூலிகைத் தாவரங்கள்**

எங்கள் பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை ஆங்காங்கே நூல் வடிவில் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும், இங்கு கிடைக்கக் கூடிய தாவரங்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. இது பற்றிய முழுமையான ஆய்வு தேவையானது. கிடைக்கக் கூடியவற்றில் அரிதாகக் காணப்படுபவை, போகத்துக்குப் போகம் மாற்றமடைபவை, அதிகளவில் தேவைப்படுபவை என அனைத்தும் பட்டியலிடப் படவேண்டும். மூலிகைகளின் பரம்பல் மற்றும் செறிவு பற்றிய தகவல்கள் சித்த மருத்துவத்துறையில் கிடைக்கப் பெற்றாலும் அந்தத் தகவல்கள் புதுப்பிக்கப்படவேண்டும். அழிந்து போகும் மூலிகைத் தாவர இனங்களை இனம் பெருக்கிப் பாதுகாக்கவேண்டும். அனை வரும் பயன்பெறக் கூடியதாக இருக்க வேண்டும். மூலிகைத் தோட்டங்களை அமைத்தல், 'மூலிகை வங்கி' யொன்று உருவாக்கம் பெறுதல் என்பன ஆக்க பூர்வமான செயல் திட்டங்களாக அமையும்.

*(வளரும்)*



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனக்கும் தன் மாயக்கண்ணாடிக்கும் தெரியாமல் இளவரசர்கள் இருவரும் மாயமாய் மறைந்துபோனதை எண்ணுகையில் மந்திரக்கிழவிக்கு தன்மீதே கோபம் கோபமாய் வந்தது. ''அவர்கள் இருவரையும் நான் குழந்தைகள் என்று தப்புக்கணக்குப் போட்டுவிட்டேன். அதனால்தான் இப்படியொரு நிலை வந்துவிட்டது. என்றாலும் இந்த மாயத்தீவைவிட்டு அவர்கள் எங்கே போய்விடப்போகிறார்கள். அவர்கள் இருவரையும் பிடித்து, அவர்கள்இரத்தத்தைக் குடித்துப் பழிவாங்க வேண்டும்'' என்று கர்ச்சித்தாள் அவள்.



''மாட்சிமை பொருந்தியவரே! இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உத்தரவிடுங்கள்'' என்று மந்திரக்கிழவியின் கட்டளைக்காகக் காத்திருந்தார்கள் இராட்சதர்கள். ''உடனேயே நீங்கள் தீவின் எல்லைப் புகுதிக்குச் சென்று காவலைப் பலமாக்குங்கள். நான் என்னுடைய முழுச் சக்தியையும் பிரயோகித்து அவர்களைக் கண்டு பிடிக்கிறேன்'' என்று கிழவி கூறினாள்.

''அப்படியே ஆகட்டும் வல்லமை மிக்கவரே!'' என்று கூறித் தலைவணங்கி விடைபெற முயன்றனர் இரு அரக்கர்களும். அப்போது ஏதோ நினைத்தவள்போல ''அடே! அடிமைகளே ஒருகணம் நில்லுங்கள். நாம் ஏற்கனவே பிடித்து அடைத்துவைத்திருக்கும் இளவரசியையும் அந்தக் குகையில் கொண்டு சென்று அடையுங்கள்'' என்று கூறியவாறே மணிமொழியை அடைத்துவைத்திருந்த அறையை நோக்கி வேகமாய் நடந்தாள் மந்திரக்கிழவி.

கதவைத் திறந்தவளுக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. இளவரசியைக் கட்டிவைத்த இடத்தில் வெறும் கயிறுகள் மட்டுமே இருந்தன. ''அந்தச் சனியன்கள் தங்களோடு இவளையும் கூட்டிக்கொண்டு சென்றுவிட்டார்கள். மூவரையும் பிடித்தால் அவர்களை நான் சும்மா விடப்போவதில்லை'' என்று மாயத்தீவே அதிரும்படி கத்தினாள் மந்திரக்கிழவி. *(தொடரும்)*

# சிறுவர் கதிர்

## பாழடைந்த வீடு

சிறிய கிராமம் ஒன்றில் பாழடைந்த வீடு ஒன்று இருந்தது. அந்த வீட்டிற்கு ஒருவரும் செல்வதில்லை. அந்த வீட்டுக்கு அருகே யாரும் குடிசை அமைத்து வாழ்வதுமில்லை. இரவானதும் அந்த வீட்டில் இருந்து ''சலசல'' என சலங்கைச் சத்தமும் ''பட பட'' என யன்னல்களும் கதவுகளும் காற்றுக்கு அடிக்கும் சத்தங்களும் கேட்கும். அந்த வீட்டிலிருந்து ஒரு வெள்ளை உருவமொன்று அருகே உள்ள புளிய மரத்திற்குச் செல்லும். இதனால் ஆவிகளின் அட்டகாசங்களை அடக்கும் சக்தி உடைய பத்துப்பேர் வேறு நகரத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு வந்தனர். அந்த வீட்டின் அருகாமையில் ஒரு சிறிய குடிசை அமைத்து பத்துப்பேரும் வாழ்ந்தனர்.



இரவானதும் சத்தம் கேட்கும் என நினைத்தனர். அதுபோல சத்தம் கேட்டது. பத்துப்பேரும் குடிசை ஓட்டை வழியாக அந்த வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் உள்ள இன்னும் ஒரு விஞ்ஞானக் கருவிமூலம் பத்து மோப்பநாய்களை உருவாக்கினர். அந்த வீட்டிலிருந்து ஆவிகள் சென்றனது. அதைக் கண்ட பத்துப்பேரும் அந்த வீட்டை நோக்கிச் சென்றனர். அந்த வீட்டின் யன்னல் வழியாக எட்டிப்பார்த்தனர். வெளியே சென்றதையும்விட அதிகமான ஆவிகள் வீட்டுக்குள்ளே இருந்தன. அவர்கள் அந்த ஆவிகளை அடக்கி முடிப்பதற்கு ஒரு வருடம் செல்லும் என எண்ணினர். பல ஆவிகளை அடக்கும் கருவி மூலம் அடக்கினர். அடக்க முடியாத ஆவி கள் அவர்களது குடிசையை அலங் கோலப்படுத்தியது. அதைக் கண்ட அவர்கள் ''முயற்சியடையார் இகழ்ச்சியடையார்'' என எண்ணி ஒரு குடிசையை அமைத்தனர்.

அடுத்தநாள் இரவு சத்தம் கேட்டதும் அனைவரையும் கூட்டிச் சென்று பார்க்கலாம் என எண்ணினர். ஆனால் சத்தம் கேட்கவில்லை. அவர்கள் சந்தேகப்பட்டு அந்த வீட்டை நோக்கிச் சென்று யன்னல் வழியாக எட்டிப்பார்த்தனர். அங்கு ஆவிகள் உணவிற்காக வரிசையாக நின்றதைக் கண்ட அவர்கள், ஆவியை அடக்கும் கருவியால் எல்லா ஆவிகளையும் அடக்கினர். ஆனால் ஒன்று மட்டும் வெளியே சென்றது. அதைக் கண்ட அவர்கள் அதைத் துரத்திக்கொண்டு ஓடினர். அது திடீரென நூறடி உயரமாக வளர்ந்தது. அதைக் கண்ட அவர்களால் ஆவியை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் தமது விமானத்துக்குத் தகவல் கொடுத்தனர். தகவல் கிடைத்ததும் அவர்களின் விமானம் அங்கு வந்து அந்த ஆவியை அழித்தது. அதன் பின்னர் அப்பகுதியில் பலர் குடிசை அமைத்துச் சந்தோசமாய் வாழ்ந்தனர். ✱

**ந.லம்போதரன்,** தரம் 7E,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி.


## மாணவர் தூரிகை




**ஜெ.துவாரகா,** தரம் - 3C,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.



**சி.வைஸ்ணவி,** தரம் - 8A,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட.




**ஜெ.ஜென்சி,** தரம் - 7,
திருக்குடும்ப சிறுவர் இல்லம், சில்லாலை.



**க.சரண்யா,** தரம் - 5,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.



**அ.றாசிலஸ்,** தரம் - 4,
சென்.ஜோசப்.



**உ.பாஜஜல்ஷ்,** தரம் - 9 A,
யா/ஹாட்லிக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 10

1. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைவர் பெயர்என்ன?
2. மும்பைமீது தாக்குதல் நடத்தி, பின்னர் பிடிபட்ட தீவிரவாதியின் பெயர் என்ன?
3. உலகிலேயே உயரமான நாயின் பெயர் என்ன?
4. மண்ணைப் பண்படுத்துவதற்கு பாரம்பரியமாக நாம் உபயோகப் படுத்தும், விலங்குகளின் வலுவைக் கொண்டு இயங்கும் கருவியின் பெயர் என்ன?
5. அண்மையில் காலமான தென்னிந்திய நகைச்சுவை நடிகர் (இவர் திருவிளையாடல் படத்தில் நடித்தவர்) யார்?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 15.04.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா?-08
சரியான விடைகள்

(1) குமார் சங்கக்கார. (2) நவாஸ் ஷெரிப்.
(3) கோகுலராகவன்.
(4) கோரியாந்தன் அணி.
(5) சிற்பி மணிவண்ணன்.

### பரிசுபெறுவோர்

01. ப.றஜிதா,
*தரம் - 4 , தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி.*
02. யோ.சிவரஜனி,
*தரம் - 6 , மட்டுவில் கமலாசனி வித்தி.*
03. ச.கஜருபன்,
*தரம் - 9D , யாழ்.மத்திய கல்லூரி.*
04. சி.டமிலன்,
*தரம் - 8 , செங்குந்தா இந்துக் கல்லூரி.*
05. தி.ரேனுஜன்,
*தரம் - 8 B, செங்குந்தா இந்துக் கல்லூரி.*
06. சி.நிரோஜன்,
*தரம் - 4 B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி..*

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளலாம். விடை தருபவர்களுடன் சிறுவர் கதிர் வினாப் பகுதியை வெட்டி இணைக்கப்பட வேண்டும். விடை தருபவர் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களை மறக்காது குறிப்பிடுங்கள்.

## விடுகதை சொல்லப்போறோம்...

01. அந்தரத்தில் தொங்குது அழகான வீடு. அது என்ன?
குருவிக்கூடு
02. அண்ணன் தம்பி இருவர்; ஆயுள்வரை சேரமாட்டார்கள். அவர்கள் யார்?
தண்டவாளம்
03. அடித்தாலும் உதைத்தாலும் திருப்பி அடிக்கமாட்டான். அவன் யார்?
பந்து
04. அனலுக்கும் பிறப்பான்; குளிருக்கும் பிறப்பான். அவன் யார்?
புகை
05. அவள் குளித்தால் இறந்து விடுவாள். யார் அவள்?
நெருப்பு
06. அண்ணனுக்கு எட்டாது; தம்பிக்கு எட்டும். அது என்ன?
உதடு
07. ஆடையில்லாக் கறுப்பழகி; ஆடிச் சுழன்று பாடுகின்றாள். அவள் யார்? இசைத்தட்டு

**ஞா.விவேந்தன்,**
தரம் 8A,
*சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

## நல்ல பழக்கங்கள்

★ அன்புடன் பழகுவோம்
★ ஆசிரியர் சொற்படி நடப்போம்
★ உண்மை உரைப்போம்
★ பெரியோரை மதிப்போம்
★ ஒற்றுமையாக வாழ்வோம்
★ ஏழைகளுக்கு இரங்குவோம்
★ இன்சொல் பேசுவோம்
★ சுத்தம் பேணுவோம்
★ உயிர்கள் மீது கருணை காட்டுவோம்
★ பிறருக்கு உதவிசெய்வோம்.

**V.யசோதரன்,**
தரம்-3 A, யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி, கந்தரோடை.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..................................
தரம் :-..................................
பாடசாலை :-..................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

............ ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## பொன் மொழிகள்

அன்பு வேண்டும் இறைவனில்
ஆசை வேண்டும் தமிழினில்
இன்பம் வேண்டும் இயற்கையில்
ஈகை வேண்டும் பொழுதினில்
உண்மை வேண்டும் உயர்வினில்
ஊக்கம் வேண்டும் செயலினில்
எளிமை வேண்டும் வாழ்க்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு அரங்குகளில்

# இலங்கை அணியின் பயிற்சியாளராக பெய்லிஸ் தொடர்ந்து நீடிப்பார்



பொலீவியாவிற்கு எதிராக பொலீவியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தகுதிச் சுற்றுப் போட்டியில் மரடோனா பயிற்சியின் கீழ உள்ள ஆர்ஜென்ரீனா அணி 1 - 6 என்ற கோல் கணக்கில் படுதோல்வி தழுவியது.


பொலீவியா முன்கள வீரர் ஜோகின் பொடீரோ 3 கோல்களைத் தொடர்ச்சியாக அடித்து 'ஹட்ரிக்' சாதனை புரிந்தார்.

கடல் மட்டத்திற்கு 3,600 மீற்றர்கள் உயரத்தில் உள்ள மைதானத்தில் இந்த போட்டி நடைபெற்றது. எப்போதும் இங்கு பொலீவியாவை வீழ்த்துவது கடினம்தான்.

ஆர்ஜென்ரீனா அணிக்கு லூயிஸ் கொன்சாலேஸ் ஆறுதல் கோலை அடித்தார். இந்த உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று ஆட்டங்களில் 12 போட்டிகளை விளையாடிய ஆர்ஜென்ரீனா இதுவரை 19 புள்ளிகளை பெற்றுள்ளது.

மொத்தம் 10 அணிகள் இடம்பெற்றுள்ள தென் அமெரிக்க குழுவில் பொலீவியா 12 புள்ளிகள் பெற்றுள் ளது.

## ஆர்ஜென்ரீனா படுதோல்வி



இலங்கை அணியின் பயிற்சியாளர் டிரவர் பெய்லிஸ் மற்றும் உதவி பயிற்சியாளர் போல் பாப்ராஸின் பதவிக் காலம் 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இருவரினதும் கடந்த கால நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டிரவர் பெய்லிஸ் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று 41 வயதான பிரித்தானியாவைச் சேர்ந்த போல் பாப்ராஸ் 2007 ஆம், ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் இலங்கை அணியின் உதவி பயிற்சியாளராக செயல்பட்டு வருகிறார்.

## 'நைற் ரைடர்ஸ்' தலைவராக கங்குலி உறுதிப் படுத்துகிறார் ஷாருக்கான்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஷாருக்கான் அணியான கொல்கத்தா 'நைற் ரைடர்ஸ்' அணியின் தலைவராக சௌரவ் கங்குலி தொடர்ந்து நீடிப்பார் என்று தெரிகிறது. அந்த அணியின் ஆஸ்திரேலிய பயிற்சியாளர் ஜோன் புக்கானன் பல தலைவர் முறை ஒன்றை அறிமுகம் செய்வதில் முனைப்பு காட்டியதை அடுத்து கங்குலி தலைமையில் கேள்விக்குறி எழுந்தது, ஆனால் தற்போது அந்த அணியின் உரிமையாளர் ஷாருக்கான், சௌரவ் கங்குலி தலைவராக நீடிப்பார் என்று சூசகமாக கூறியுள்ளார். ஐ.பி.எல். 'ருவென்ரி- 20' கிரிக்கெட் போட்டிகள் தென்னாபிரிக்காவில் இம்மாதம் 18ஆம் திகதி முதல் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

''தாதா (கங்குலி) இல்லா மல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இல்லை'' என்று ஷாருக்கான் கூறியது சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

ஜோன் புக்கானன் பல தலைவர் என்ற புதிய முறையை கூறியுள்ளது கங்குலிக்கு எதிரானது அல்ல என்று ஷாருக்கான் கூறியுள்ளார். அதாவது கங்குலி மட்டுமல்லாது நியூஸிலாந்தின் மெக்கலம், மேற்கிந்திய அணியின் கிறிஸ் கெய்ல், மற்றும் எல்.ஆர். ஷுக்லா ஆகியோரும் அணித் தலைமை பொறுப்பை கங்குலியுடன் பகிர்ந்து கொள்வார் என்பதுதான் ஜோன் புக்கானனின் கருத்து. ஆனால் தற்போது மைதானத்தில் ஒரு அணி வகுக்க வேண்டிய உத்திகளை ஆலோசகர்கள் குழு வடிவமைக்கும் என்ற புதிய அணுகுமுறை கடைபிடிக்கப் படவுள்ளது. இதன்படி களத் தடுப்பு, பந்து வீச்சு, துடுப்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்த நிபுணர்கள் குழு உத்திகளை வடிவமைத்து அவ்வப்போது களத்தில் பணியாற்றும் அணித்தலைவருக்கு அறிவுறுத்தும்.

ஆனால் அணியின் முக்கிய முடிவுகள் பயிற்சியாளர் ஜோன் புக்கானன், அணித்தலைவர் கங்குலி, மற்றும் துணைப் பயிற்சியாளர் மத்யூ மோட் மற்றும் சிலரால் மட்டுமே எடுக்க முடியும் என்ற புதிய திட்டம் உருவாகியுள்ளது.

இருப்பினும் அணியின் தலைவர் பற்றிய இறுதி முடிவு தென்னாபிரிக்காவில் நடைபெறும் பயிற்சி முகாமிற்கு பிறகே முடிவு செய்யப்படும் என்றும் ஒரு சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில் இப்போதைக்கு இல்லை



பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானில் இப்போதைக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை அனுமதிக்க வாய்ப்பு கிடையாது என கிரிக்கெட்டின் தலைமையகமான சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தெரிவித்துள்ளது.

இந்திய, நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியை ஒட்டி நியூஸிலாந்து வந்துள்ள ஐ.சி.சி. யின் தலைவர் டேவிட் மோர்கன் கடந்த வியாழக்கிழமை நிருபர்களிடம் கூறியது:-

பாகிஸ்தானில் பயங்கரவாதம் அவ்வப்போது அந்நாட்டு மக்களை துயரப்படுத்தி வந்தாலும் மார்ச் 3 ஆம் திகதி இலங்கை வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் உலகக் கிரிக்கெட்டை அதிர வைத்துள்ளது.

அந்நாட்டில் பாதுகாப்பு குறித்து மற்றைய நாடுகள் தயக்கம் தெரிவிப்பதற்கு லாகூர் சம்பவம் வெளிப் படையான காரணமாகி யுள்ளது.

ஆதலால் பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளுக்கு இப்போதைக்கு வாய்ப் பில்லை. பாதுகாப்பு அம்சங்களில் மிகப்பெரிய மாற்றத்தை அந்நாடு கொண்டுவரும் வரை அங்கு போட்டிகளை நடத்த ஐ.சி.சி பரிசீலனை செய்யாது.

அதேசமயம் மற்றைய நாடு கள் அந்நாட்டை தனிமைப்படுத்தி விடக்கூடாது.

அதுவே, பாகிஸ்தான் விடயத்தில் ஐ.சி.சி.யின் நிலைப்பாடு. பொதுவான இடத்தில் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் விருப்பம் தெரிவிக்கும்போது நாடுகள் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில் பாகிஸ்தான் ஒரு முக்கியமான நாடு.

பல்வேறு நட்சத்திர வீரர்களை உலகிற்கு தந்த நாடு. வலுவான வீரர்கள் தற்போதும் அந்நாட்டு அணியில் உள்ளனர். ஆதலால் ஒதுக்கிவிடக்கூடாது.

சொந்த மண்ணில் போட்டியை நடத்த பாகிஸ்தான் கோரிக்கை விடுத்தால் இப்போதைக்கு ஐ.சி.சி. அனுமதிக்காது. ஆனால் பொதுவான இடங்களில் போட்டியை நடத்தக் கோரினால் அதைப் பரிசீலிக்கும் என்றார் மோர்கன்.

## இங்கிலாந்துக்குப் பயிற்சியாளரா? மறுக்கிறார் கிறிஸ்ரன்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்கள் தேர்வுப் பட்டியலில் தமது பெயரும் இடம்பெற்றுள்ளது என்ற பிரிட்டன் ஊடகங்களின் செய்தியை இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கேரி கிறிஸ்ரன் கடுமையாக மறுத்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை என்னிடம் இது குறித்து எதுவும் பேசவில்லை என்று கூறியுள்ளார் கிறிஸ்ரன்.

2007 டிசம்பரில் கேரி கிறிஸ்ரனுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 2 ஆண்டுகளுக்கான பயிற்சியாளர் ஒப்பந்தத்தை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இங்கிலாந்து பயிற்சியாளர் பீற்றர் மூர்ஸ் நீக்கப்பட்ட பிறகு இடைக்கால பொறுப்பேற்றுள்ள முன்னாள் சிம்பாப்வே வீரர் அன்டி பிளவர்தான் பயிற்சியாளர் பொறுப்பிற்கு பொருத்தமானவர் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை கருதுவதாகவும் பிரிட்டன் ஊடகங்கள் கூறுகின்றன.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தரையும் சில பத்திரிக்கைகள் இந்த விவகாரத்தில் தொடர்புபடுத்தி எழுதியுள்ளன. ஆனால் 2011 ஆம் ஆண்டு வரை தென்னாபிரிக்க அணியுடன் தனக்கு ஒப்பந்தம் இருப்பதாக மிக்கி ஆர்தர் கூறினர்.

[illegible] இறுதியில் பயிற்சியாளருக்கான நேர்முகம் நடைபெறவுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை [illegible] தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்


## சிவபுரம்



யாவரும் நலம், அருந்ததீ போன்ற சமீபகால மந்திர தந்திரப் படங்களின் வரிசையில் இணைந்துள்ளது 'சிவபுரம்'. மலையாளத்தில் வெளிவந்து வெற்றிவாகை சூடிய கையோடு தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு 'சிவபுரம்' வெளியிடப்பட்டுள்ளது.

வசிய சக்தி வாய்க்கப்பெற்ற மந்திரவாதியான மனோஜ்.கே.ஜெயன் ஊரையே ஆட்டிப்படைக்கிறான். ஏராளமானோரை தன் சுயநலத்துக்காகக் கொன்று குவிக்கிறான். இந்நிலையில் கரு நாகங்களால் பாதுகாக்கப்படும் நாக மாணிக்கத்தைப் பற்றி அறியும் அவன், அதை எப்படியாவது அடைந்துவிடத் துடிக்கிறான். அமெரிக்காவில் இருந்து தன் தாயின் கனவை நிறைவேற்ற பிருத்விராஜின் உடலில் உள் நுழைந்து நாகமாணிக்கத்தை மந்திரவாதி அடைய முற்படுகிறான். எனினும் இறுதியில் கலாபவன்மணி, பிருத்விராஜ் போன்றோரின் எதிர் நடவடிக்கைகளால் தோற்றுப்போய் உயிர்துறக்கிறான் மந்திரவாதி. தர்மம் வெற்றிவாகைசூட, தான் அமெரிக்காவில் இருந்து சொந்த ஊருக்குவந்த நோக்கத்தையும் நிறைவேற்றுகிறார் பிருத்விராஜ்.

தன்னுடைய அட்டகாசமான நடிப்பால் அனைவரையும் கவர்ந்துள்ளார் மனோஜ்.கே.ஜெயன். படத்தில் வில்லன் பாத்திரத்தில் வந்தாலும் ஆரம்பம்முதல் இறுதிவரை பார்ப்போர் அனைவரையும் பயங்கொள்ளவைத்து படத்தின் நாயகன் இவர்தானோ என எண்ணவைக்கிறார். பிருத்விராஜ் காதல் காட்சிகளில் மட்டுமே பாராட்டுப் பெறுகிறார். படத்தின் பயங்கரத்தை அதிகரிக்க ஓட்டுவீடுகள், குகை, நாகங்களின் உறைவிடம் போன்ற காட்சி அமைப்புகள் துணை புரிகின்றன. பின்னணி இசையும் விரட்டி இருக்கின்றது. சந்தோஷ் சிவனின் நெறியாள்கை வெகு நேர்த்தியாகவும், கவரும் தன்மை கொண்டதாகவும் அமைந்துள்ளது. வழமையான 'அம்புலி மாமா' பாணியிலான கதையைத்தான் தன்னுடைய நெறியாள்கைமூலம் மிரட்டலாகச் சொல்லியிருக்கிறார் சந்தோஷ்சிவன். 'சிவபுரம்' படம் பார்ப்போரை பயபுரத்துக்கு இட்டுச் செல்கிறது.*



## தெலுங்கிலும்....!

தமிழில் இருந்து தெலுங்குக்குச் செல்லும் படங்களின் வரிசை இப்போது அதிகரித்திருக்கிறது. தமிழில் பெற்ற அதே வரவேற்பையும்,வசூலையும் இவை பெறுவதால், தமிழில் வெற்றிபெற்ற படங்களைத் தெலுங்குக்கு மொழி மாற்றம் செய்யப் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். அந்தவகையில் 1980 ஆம் ஆண்டுகளில் நடந்த கதையை மையமாகக்கொண்டு உருவாகிய 'சுப்பிரமணியபுரம்' படமும், தெலுங்குக்கு செல்லவுள்ளது. ஆனால் தெலுங்கில் இது 'ஆனந்தபுரம்' என பெயர் மாற்றம் பெற்றே வெளி வரவுள்ளது. தமிழைப் போல் தெலுங்கிலும் இப்படம் வசூலைக் குவிக்கும் என நம்பப் படுகிறது.



## தொட்டுப்பார்

நந்து என்ற இளம்நெறியாளரின் இயக்கத்தில் வெகுவேகமாக வளர்ந்து வருகின்றது 'தொட்டுப்பார்' என்ற திரைப்படம். இந்தப் படத்தில் முழுக்க, முழுக்கப் புதுமுகங்களே நடிக்கிறார்கள். கூத்துப்பட்டறை அமைப்பைச் சேர்ந்த வித்தியார்த் என்பவர் நாயகனாகவும், ஆந்திராவைச் சேர்ந்த லட்சணா என்பவர் நாயகியாகவும் இப்படத்தின் மூலம் அறிமுகம் ஆகின்றனர். 'அந்தநாள் ஞாபகம்' என்ற படத்தின் மூலம் அறிமுகமான ரமணா இதில் வில்லனாக அவதாரம் எடுக்கிறார். கலகலப்பான நகைச்சுவை இணைந்த குடும்பப் படமாக இது அமையும் என்றும், இதில் அறிமுகமாகும் புது முகங்களுக்கு எதிர்காலத்தில் தமிழ் சினிமாவில் நிரந்தர இடம் கிடைக்கும் என்றும் இயக்குனர் நந்து தெரிவித்துள்ளார்.

## கலைச்சுடர்





## ஓலை வெடிப் பேரரசு

அடுக்கு வசனங்களுக்கும், அர்த்தம் இல்லாத பாடல்களுக்கும், யதார்த்தமே இல்லாத திரைப்படங்களுக்கும் சொந்தக்காரராக விளங்குபவர் இயக்குனர் பேரரசு. அண்மைக்காலமாக இவர் இயக்கிய படங்கள் சரிவர ஓடாத காரணத்தால் தன்னுடைய அடுத்த படத்தை எப்படியும் வெற்றிப் படமாக்க வேண்டும் என்ற வெறியுடன் உழைத்து வருகிறார். இடையிடையே பிறரின் படங்களுக்கும் பாடல்களும் எழுத இவர் மறுப்பதில்லை. அண்மையில் இவர் எழுதிய 'ஓலை வெடி பத்த வைச்சேன்' என்ற பாடலை சிம்புவும்,சுசித்திராவும் இணைந்து பாடியுள்ளனர். இந்தப் பாடலின் மூலம் கிடைத்த வருமானத்தை சமூக சேவைக்காக செலவிட இருப்பதாக கூறியுள்ளார் பேரரசு.

## குடும்பமே முக்கியம்



ராகவி என்று சொன்னால் பலருக்குத் தெரியாது. ஆனால் 'திருமதி செல்வம்' என்ற தொலைக்காட்சித் தொடரில் தீயகுணம் கொண்ட ஜெயந்தி என்று கூறினால் எல்லோருக்குமே இவரைச் சட்டெனத் தெரிந்துவிடும். தொடரில் இவர் வில்லியாகத் தோன்றினாலும் நிஜத்தில் இவர் மென்மையான இதயம் கொண்டவர். பல தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதற்கு அழைப்பு வந்தபோதும் அவற்றை மறுத்து ஒரே நேரத்தில் ஒரு தொடரில் மட்டுமே நடிக்க முடியும் என்று இவர் கூறியுள்ளார். ஏனெனில் பல தொடர்களில் நடித்தால் குடும்பத்தாரையும், தன்னுடைய குழந்தை ஜித்திசாயையும் கவனிக்க நேரம் இல்லாமல் போய்விடும் என்றும் தனக்கு குடும்பம்தான் முக்கியம் என்றும் இவர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

# நான்காவது பிறந்தநாள் வாழ்த்துகள்

சிவன்கோயிலடி, ஆவரங்காலைச் சேர்ந்த
ஜனார்த்தன சர்மா - காயத்திரி
தம்பதிகளின் சீமந்த புத்திரன்

## கிரிஷிகேசன் (ரிஷி)



இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடும் வேளை அன்புள்ள அப்பா, அம்மா, அன்புத் தம்பி வர்மா, பூட்டன்மார், பூட்டிமார், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார்களான ஹர்ஷ் அண்ணா, கிருஷ்ணா அண்ணா மற்றும் சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமி, அத்தைமார், அக்காமார், அண்ணன்மார், மைத்துனர்மார், மைத்துனி, தம்பிமார், தங்கைமார் இவர்களுடன் உற்றத்தார், சுற்றத்தார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ரிஷியை ஸ்ரீ வல்லிபுர மாயவனின் நல்லாசியுடன் நடராஜ இராமலிங்கேஸ்வரப் பெருமானின் திருவருளுடன் பல்கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள்.

சிவன் கோயிலடி, ஆவரங்கால். — பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு JP (அப்பப்பா), பிரதமகுரு, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயில்.

# குருநகர் பிரதேசத்தில் நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி கட்டம் கட்டமாக பல்வேறுநிலையங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது என மாநகரசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு ஊசி ஏற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)


## வேலைவாய்ப்பு

தெற்கில் இயங்கும் பிரபல CAREKLEEN சுத்திகரிப்பு / பராமரிப்பு நிறுவனத்திற்கு சிறந்த பின் வரும் தகுதிகளையுடைய சந்தைப்படுத்தல் முகாமையாளரும்/நிர்வாக முகாமையாளரும் தேவை.

- ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக பேசக்கூடியவர்.
- ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்தாற்றல் உடையவர்.
- சந்தைப்படுத்தல் திறன்/ நிர்வாகத்திறன் உடையவர்.
- G.C.E. A/L தகுதியுடையவர்.

*KLEEN -JAFFNA*

140, கோயில் வீதி, நல்லூர்.

தொ.பே: 077 3627055

அங்கிருந்தும் இங்கிருந்தும்




COM BANK e Exchange மூலம் வெளிநாட்டிலிருந்து பணத்தை பெறுவித்து

ரூ.12 இலட்சம் பணப் பரிசில்களை வெல்லுங்கள்!

டிசெம்பர் மாதம் முதல் எதிர்வரும் ஏப்பிரல் 2009 வரை
மாதாந்தம் 3 வெற்றியாளர்களுக்கு தலா ரூ.100,000/-

இன்றே COM BANK e Exchange மூலமாக பணத்தை அனுப்பும்படி வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிவியுங்கள். COM BANK e Exchange அதிவிரைவானது, நம்பிக்கையானது. இலங்கையின் எப்பகுதியிலும் பணத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 667 679, 011 2 353 353

COMBANK Exchange MONEY TRANSFER

கொமர்ஷல் வங்கி


# சான்றிதழ்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.5

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தொழில்நுட்ப கற்கைகளைப் பயின்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இதுவரை சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்டப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் கேட்டுள்ளார். (04-9)


## விற்பனைக்கு

30 KW, 10KW LISTER, மின்பிறப்பாக்கி உடன் விற்பனைக்குண்டு
மூர்த்தி, சிவன் வீதி, பரவைகுளம், திருநெல்வேலி.

## பணிப்பெண் தேவை

2 பேர் அடங்கிய குடும்பத்துக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்பு:-077 1965666

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வங்கி உத்தியோகத்தராகக் கடமைபுரியும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
தொடர்பு:- 0115 732529

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் , கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
*19, முருகேசர் லேன், நல்லூர்.*

## திருமண சேவை

1978 ஆம் ஆண்டு, B.Sc.இஞ்சினியர் சதயம் 60 பாவம் செவ்வாய் இல்லை, 1975 ஆம் ஆண்டு, B.Sc. இஞ்சினியர், அனுஷம் 4 இல் செவ்வாய் 68 பாவம், அமெரிக்கா P.R, 1972 ஜேர்மனி P.R, தாரமிழந்த மணமகனுக்கும் மணமகள் மார் தேவை.
துர்க்கா திருமண சேவை,
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
021 4591417

## விற்பனைக்குண்டு

கோப்பாய் மத்தியில், கண்ணகி அம்மன் கோவிலுக்கும் கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கும் அண்மையாக 4 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: திருமதி மதிவதனி நடேசு
தொ.பே: 021 2225070

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981, புனர்பூசம் 4ஆம் பாதம், 12 இல் செவ்வாய், கிரகபாவம் 44 1/2 உடைய தேசிய பாடசாலையில் ஆசிரியராக (கல்வியியற் கல்லூரி) English Medium பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (மணமகள் ஆசிரியை, முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அரச அலுவலகங்களில், வங்கிகளில் பணிபுரிவோர் விரும்பத்தக்கது) தொடர்புக்கு பெற்றோர் தொலைபேசி இல. 0776183115 Or
*(மாலை 5 மணிக்குப் பின் 0602217435)*

## மாங்கல்யா திருமண சேவை

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலைசெய்யும் இருபாலாரது குறிப்புகள் முழு விவரங்களுடன் உண்டு. நம்பிக்கையான, திருப்தியான, துரிதமான சேவை. குறிப்புகள் எம்மிடம் சகல இடங்களிலும் இருந்து கிடைத்த வண்ணம் உள்ளன. தேர்விற்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்கு பின் நேரில் தொடர்பு கொள்ளலாம்.
தொ.பே: 021 222 6043, மொ.இல. 077 1386846


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chartered Institute of Management Accountants

# The graduates of the UK universities rely on CIMA qualifications for professional progression




Since 2006 more than 10,000 UK university graduates have registered to study CIMA to further enhance their marketability in the global employment market.

A CIMA qualification is a proven route to high achievement. As a professional qualification with practical experience requirements, it builds on and enhances the skills gained through other academic study.

And with skills that are transferable across international boundaries and business sectors, the CIMA qualification is a quality standard that is recognised by employers around the globe.

Call now to find your nearest tuition provider!

Genesys

CIMA Colombo | T. 011 250 3880 | E. colombo@cimaglobal.com

**www.cimaglobal.com**

* **Mobileatnet Computer Services (MCS)** 324, Palaly Road, Jaffna. Tel: 021 222 6373.

* **Jaffna College Undergraduate Department** 464, Hospital Road, Jaffna. Tel: 021 222 3382, 021 222 3960,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெய்வ தரிசனம்....

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

பதவி உயர்வு பெறுவதற்கு ஒரு வாத்தி பெற வேண்டிய முதலாவது குவாலிஃபிக்கேஷன், கல்வி அதிகாரிகளது பெயர்களைப் பாடமாக்குவதுதான் என்பது வாத்தியாருடைய அசைக்க முடியாத சித்தாந்தம்.

அதிகாரி இப்பொழுதும் காரடியில் தான் நின்று கொண்டிருக்கிறார். எதிர்பக்கம் திரும்பப் போகிறாரோ? 'அடடா அரிய சந்தர்ப்பம் கைநழுவப் பார்க்கிறதே!..... அவர் இங்கு வராவிட்டால் என்ன? நானோ வலியப் போய்க் கதைப்பம். அதிலை ஒரு பிழையும் இல்லை. இப்பிடித்தானே பெரிய மனிதர்களைப் பழக்கம் பிடித்துக் கொள்வது?......'

வாத்தியார் அவசரமாக ஒரு அடியெடுத்து வைத்து ஒரு படி இறங்குகிறார். அவரது தோளில் ஏதோ இடிக்கிறது. திரும்பிப் பார்க்கிறார். ஒரு பெண்மணி கண்ணகிப் பார்வை பார்த்துக் கொண்டு நிற்கிறாள்! வெலவெலத்துப் போகின்ற வாத்தியார் இறங்கிய வேகத்தில் எதிரே வந்தவளைக் கூடப் பார்க்கவில்லை. மன்னிப்புக் கோரும் பாவத்தை தன் முகத்துக்கு வரவழைத்துக் கொண்டு தப்புகிறார்.

அந்தப் பெண்ணுக்கு நிறம் சிவப்பு, வட்ட முகம், வண்டுக்கண், வாலிப்பான உடற்கட்டு. ஆனால் இவையெதுவும் வாத்தியாருடைய கண்ணில் படவில்லை. இவற்றையெல்லாம் கவனிக்கும் நேரமா இது? அவருடைய கவமெல்லாம் ஒருவழிப்பட்டு நிற்கிறது.

''பட்டப்பகலிலும் கண் தெரியாத குருடுகள்!'' நெருப்புத் துண்டங்களாக வார்த்தைகளை உதிர்த்துவிட்டு அப்பாற் செல்கிறாள் அந்தப் பெண். அவள் கூறியதுபோல வாத்தியார் குருடு இல்லை. அவருக்குக் கண்கள் நன்றாகத் தெரிகின்றன. ஆனால் அந்தக் கண்களில் ஒரேஒரு உருவம்தானே தெரிகிறது! அந்தக் கார்க் கனவான்! உயர்ந்த இலட்சியங்களில் உள்ளம் லயித்திருக்கும் பொழுது, சின்னச் சின்னக் கொசுக்கடிகள் ஒரு பொருட்டா? அவருக்குப் பிறின்சிப்பல் பதவி வழங்கக்கூடிய தெய்வம் ஒன்று கண்முன்னே நிற்கும்பொழுது, வேறு சிந்தனை உள்ளத்தில் எழுமா?

''இந்த வயதிலும் ஆசை போகேல்லை. இடிச்சுப் பார்க்கச் சொல்லுது''- ஒரு குரல். தொடர்ந்து சிரிப்பொலி. பின்னால் நிற்கும் இளவட்டங்களின் வேலை. வேறு வேளையாக இருந்தால் வாத்தியார் விசுவாமித்திரராகியிருப்பார். இப்பொழுது மூச்சும் விடவில்லை. பிழை தம்மீது என்பதாலல்ல, அவர் கருமமே கண்ணாய் இருக்கிறார்.

இன்னும் ஒரு அடி எடுத்து வைக்கிறார் வாத்தியார். என்ன அதிசயம். அந்த அதிகாரியும் அவரை நோக்கி அல்லவா வந்து கொண்டிருக்கிறார்?

அவரும் என்னை அடையாளம் கண்டு கொண்டு என்னுடன் கதைக்கத்தான் வருகிறாரோ? வாத்தியாருக்கு உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. துள்ளும் உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு றோட்டில் இறங்குகிறார். இன்னும் இரண்டு அடிகள் எடுத்து வைக்க வேண்டியதுதான்! பிறகு.....

இப்பொழுது வாத்தியார் சிரிக்கிறார். முப்பத்திரண்டு பற்களும் வெளியே தெரிகின்றன.'கடைவாய்கள் காதுகள் வரை அகன்று திரும்புகின்றன. தலை ஒருபக்கம் சாய்கிறது.

என்ன துரதிஷ்டம்! அவர் சிரித்த அதே நேரத்தில் அந்தக் கார்க் கனவானின் கவனம் வேறு திசையில் திரும்புகிறது, திரும்பப்படுகிறது. யாரோ ஒருவன் பின்னால் இருந்து வந்து அவருடன் கதைக்கத் தொடங்குகிறான். இது என்ன? அவர்கள் இருவரும் திரும்பிப் போகின்றார்களே காரை நோக்கி.

'வில்லன்! சரியான வில்லன்! குறுக்கை வந்திட்டானே!' வாத்தியார் புதிதாக வந்தவனைத் திட்டித் தீர்க்கிறார், தம் மனதுக்குள்தான்.

அந்தக் கனவான் இன்னும் காரடியில்தான் நிற்கிறார்.

'ஓடிப்போய் கதைப்போமா?' சபலம் தட்டுகிறது.

உவர் போனால் போகிறார். உவர் என்ன பிறின்சிப்பல் பதவியைக் கையில் தூக்கித் தரப்போகிறாரா? பிறின்சிப்பல் பதவி எடுப்பது உவரிலா தங்கியிருக்கிறது? அதற்கு இன்னும் எத்தனை...... எத்தனை.....?

புளித்திராட்சை மனப்பான்மை வேண்டாம் என்கிறது.

''சிறு துரும்பு கூட பல்லுக் குத்த உதவும் என்பார்கள். என்டாலும் சொல்லிக்கொண்டா? ஒருவேளை இவர்....?

மீண்டும் மனதை ஆசை ஆக்கிரமித்துக் கொள்கிறது. மனம் அலைபாய, கையில் இருந்த பையைச் சைக்கிளில் கொழுவுகிறார். கண்கள் அந்தக் கனவான் மீதே நிலைக்குத்தி நிற்கின்றன.

''தடால்''

ஏதோ விழுந்து நொறுங்குகிற சத்தம். வாத்தியார் கீழே குனிந்து பார்க்கிறார், அவரது சைக்கிள் நடு றோட்டில் விழுந்து கிடக்கிறது. பொருள்கள் நிறைந்த பை சைக்கிளுக்குக் கீழ் அகப்பட்டு நசுங்கிக் கொண்டிருக்கிறது. அவர் சைக்கிளை மட்டமான இடத்தில் நிறுத்திப் பையைக் கவனமாகக் கொழுவாததால் வந்தவினை.

சைக்கிளை தூக்கி நிறுத்தி பையை எடுத்து ஹாண்டிலில் மாட்டுகிறார். விழுந்து நசுங்கியதால் பையில் இருந்த பொருள்கள் சில பாழாகிப் போயிருக்கலாம். ஆனால் அவற்றைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமே வாத்தியாருக்கு உதயமாகவில்லை. கவனம் இன்னும் காரடியில்தான்.

'புதிதாக வந்தவன் யாராயிருக்கும்? ஒரு வேளை அவனும் என்னைப் போல இன்ரவியூக்கு வந்தவனோ? அவன் கருமத்தில் முந்திவிட்டான்!'

கனவானும் புதிதாக வந்தவனும் இப்பொழுது காருக்குள் ஏறி விட்டார்கள். வேண்டுமானால் இப்பொழுது கூடக் கதைக்கலாம். நாலு எட்டில் றோட்டைக் கடந்துவிட்டால்.....

வாத்தியார் இரண்டு அடி எடுத்து வைக்கிறார். அதற்குள் கார் உறுமிக்கொண்டு கிளம்பிவிடுகிறது. கார் கண்ணில் இருந்து மறையும்வரை அவர் அதையே பார்த்துக்கொண்டு நிற்கிறார், அணிலை ஏறவிட்ட நாய் போல.

இப்பொழுது வாத்தியாரைச் சோக உணர்வு பற்றிக் கொள்கிறது. காலம், இடம், சூழ்நிலை எல்லாவற்றையுமே அவர் மறந்துவிட்டார். கால், கை அசையவில்லை. மரமாக நிற்கிறார்.

பின்னால் இருந்து ஏதோ ஒன்று வாத்தியாரை இடித்துத் தள்ளுகிறது. அவர் பொத்தென்று விழுந்து தார் றோட்டை முத்தமிடுகிறார். றோட்டுப் புழுதி மூக்கில் ஏறும் பொழுதுதான் அவருக்குத் தான் நின்றுகொண்டிருந்த இடம் நடுறோட்டு என்பது ஞாபகம் வருகிறது.

மெதுவாக எழுந்து நிற்கிறார். நிற்க முடிகிறது. நல்ல வேளை கைகால்கள் ஏதும் முறிந்துவிடவில்லை! கையைத் தள்ளிவிட்டுத் திரும்பிப் பார்க்கிறார். அவரை இடித்துத் தள்ளிய வாகனம் அங்கே நின்றுகொண்டிருக்கிறது. அது ஒரு சைக்கிள்! நல்ல வேளை! அது ஒரு காராக இருந்தால்?

வாத்தியார் விரும்பியது ஒரு சின்னப்பதவியுயர்வு. ஒரு சாதாரண பிறின்சிப்பல் பதவி. கார் மோதியிருந்தால்......? இப்பொழுது மேலே மேலே...... இன்னும் மேலே..... எல்லையில்லாத உயரத்திற்குப் போயிருக்கலாம்! வாத்தியார் அதற்கும் கொடுத்து வைக்கவில்லை.

உடம்பில் படிந்த மண்ணைத் தட்டிவிட்டு சைக்கிள் அடிக்குச் சென்று பையை விரித்துப் பார்க்கிறார். இரண்டு பொட்டலங்கள் கிழிந்து அவற்றில் இருந்த மாவும், சீனியும் இரண்டறக் கலந்திருக்கின்றன. பையை அசைக்கிறார்.

''கலீர் கலீர்!'' -போத்தல் ஓட்டுச்சத்தம்.

வாங்கிய எண்ணெய்ப் போத்தலும் உடைந்திருக்க வேண்டும். பாதி எண்ணெய் நிலத்தில் வடிந்திருக்கிறது. மறுபாதி மாவுடனும், சீனியுடனும் சங்கமமாகியிருக்கிறது. 'வீட்டுக்குப் போனால் மனிசி ஏசும், ஏசட்டுமே அவள் எதற்குத்தான் ஏசாமல் இருக்கிறாள்? இன்றைக்கு மனிசி என்னைத் திட்டினால், அதில் நிறைய நியாயம் இருக்கும். தெய்வத்தை நெற்றிக்கு நேரே கண்ட பின்பும், வரம் கேட்காது விட்ட முட்டாள்த்தனத்திற்கு என்னை எவ்வளவு ஏசினாலும் தகும்.

வீடு நோக்கிப் போகின்றார் வடிவேலு வாத்தியார், திட்டுக்களையும் தாங்குவதற்குத் தயாராக மனதைத் திடப்படுத்திக் கொண்டு. அவருடையது எதையும் தாங்கும் இதயம்!. ***

*(நன்றி: சிறுகதை எழுதுவது எப்படி?)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 55

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | |
| 6 | | | ■ | 7 | 8 | | ■ |
| | ■ | 9 | 10 | | | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| ■ | | ■ | 14 | 15 | | ■ | 16 |
| 17 | | 18 | ■ | | ■ | 19 | |
| 20 | | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்

1. உபயோகிப்பு.
2. பெரியவர்/மேலானவர் என்று பொருள்படும்.
3. சுமத்தல்.
4. சூட்சுமமான வினா.
5. தூய்மை/பரிசுத்தம்.
8. கட்டுதல்/பாடல் புனைதல்.
10. பாடல்.
12. நரி இதில் தேர்ந்தது.
15. தாளப் பிரமாணம்/கைம்பெண்.
16. தன்மை.
17. அவசரத்துடன் கூடிய பதற்றம்/சிரமப்படல்.
18. தடி/பொல்லு.
19. மாலை வகைகளில் ஒன்று.
21. பிடியைத் தளர்த்து.

### இடமிருந்து வலம்

1. இந்த வலயங்களால் தான் பொது மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமர முடியாதுள்ளது.
5. காயம்.
6. வேகம்.
7. ஐம்புலன்களையும் அடக்கி ஒரு மனதாக இரு.
9. இல்லாமல் ஒழித்தல்/ உடைத்தெறியல்.
11. மகள்.
13. ஒரு அசைச்சொல். தங்களை/ தங்களுடையதைக் குறிக்கும்.
14. பெண்.
17. கூடிய.
19. கழித்தல் குறியீடு.
20. வயலில் கட்டப்படுவது/வயலின் எல்லையில் இருக்கும்.
21. கைகளில் பத்து. கால்களில் பத்து.
22. பூட்டான் தலைநகர்.
23. பிடித்த பிடியை இது இலேசில் நழுவவிடாது.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப்பரிசில்கள் வழங்கப்படும் அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 55**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (15.04.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 55 இல் வெற்றிபெறுவோர் களது விபரம் 19.04.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ,மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 53இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)அமுதம் (4)தாமதி (7)திரளை (8)அகண்ட (9)கண் (10)பழம் (11)பாசாங்கு (14)அடுக்கு (15)முழுகு (17)கனிதல் (19)பகடை (21)விலைவாசி (23)விதி (24)இல் (25)வில்

மேலிருந்து கீழ்
(1)அதிக (2)முரண்பாடு (3)தளை (4)தாகம் (5)மண் (6)திடல் (8)அழகு (10)பங்குனி (12)சாக்கடை (13)குழு (14)அனுபவி (15)முல்லை (16)குரிசில் (18)தவில் (20)கதி (22)வாவி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:53 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள்வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ச.சுஜாணன்,**
பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

**2 ஆம் பரிசு**
**திருமதி.அ.நளாயினி,**
மே/பா.ந.மகேஸ்வரன்,
செம்பாட்டு ஒழுங்கை,பொற்பதி வீதி,
கொக்குவில்.

**3 ஆம் பரிசு**
**தர்மகுலசிங்கம் தனேந்திரன்,**
மகாத்மா வீதி,
நெல்லியடி,

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

## பாராட்டுப் பெறுவோர்

(1) **லிங்கமூர்த்தி சரஸ்வதி,**
அமெரிக்க மிசன் ... ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(2) **செல்வி ந.யோகேஸ்வரி,**
குருக்கள் ஒழுங்கை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(3) **வாணிசிறி செல்வகணேசபிள்ளை,**
இல:72/26, பணிக்கர்வளவு,
திருநெல்வேலி.

(4) **ஸ்ரீ.லக்ஷன்,**
இல:15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(5) **வாகினி கிருபாகரன்,**
இல:6,சேர்.பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்துச் சித்தர்கள் வரிசையில்
# சிவயோக சுவாமிகளின் தனித்துவம்

**யோகசுவாமிகளின் 45 ஆவது குரு பூசைத் தினம் இன்றாகும். அதனை யொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகசுவாமிகள் 1872 ஆம் ஆண்டு, மே மாதம் 29 ஆம் திகதி, புதன் கிழமையன்று காலையில் அவிட்ட நட்சத்திரத்தில் அவதாரம் செய்தார்.



யாழ்ப்பாணத்தில் ஆங்கிலமும், செந்தமிழும் கற்று கிளிநொச்சிப் பகுதியில் நீர்ப்பாசன இலாகாவில் தொழில் ஆற்றினார். அக் காலத்தில் இரணை மடுக் குளக்கட்டுத் திட்டத்தை ஆங்கில ஆட்சியாளர்கள் ஆரம்பித்தார்கள். காடு அழித்து நாடாக்கி, குளம் திருத்தி, வளம் பெருக்கி அமைந்த இடத்தின் வேலைகளை மேற்பார்வை செய்தவர் பிறவுண் என்னும் ஆங்கிலேயர் ஆவார். யோகநாதரை பொருட் காவலராகத் தேர்ந்தெடுத்தார். அங்கு யோகநாதர் கடமையாற்றிய காலத்தில் அவருடைய பண்புகளை அவதானித்த பிறவுண் அவரைக் கடவுள் மனிதன் (God man) என்று அழைப்பாராம். யோகநாதர் கிளிநொச்சியில் கடமையாற்றிய காலத்தில் நாட்டிய மாமரம் ஒன்று மக்களுக்கு நறுங்கனி கொடுத்து வந்தது. இம் மரத்தை சாமியார் மரம் என்று அழைப்பர்.

பழைய தவம் வந்து கைகூட, நல்லூர் தேர் மண்டபத்தில் செல்லப்பாச் சுவாமிகளை இடையிடையே அணுகிவரும் பேறு பெற்றார். தன்னுடைய உத்தியோகத்தை உதறித்தள்ளி குருவையடையத் துணிந்தார். செல்லப்பாச் சுவாமிகளிடம் சென்றார். அவர் முன் சென்றதும் பரவசநிலையடைந்தார். செல்லப்பாச் சுவாமிகள் *"நீ ஆரெடா"* என்று அதட்டி *"உன்னுள்ளே பாரடா"* என்றும் பக்குவம் நோக்கி தீட்சையும் செய்தருளினார். *"எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுவதும் உண்மை"* என்று நான்கு மகா வாக்கியங்களை யோகநாதருக்கு உபதேசித்தார். சீடராகிய யோகநாதர் பந்தம் யாவும் நீங்கப் பெற்றார். *"மழித்தலும் நீட்டலும் வேண்டாவுலகம் பழித்ததொழித்து விடின்"* என்ற வள்ளுவர் வாக்குக்கமைய தூய வெள்ளாடையே தரிப்பவராய் வேடங்களை விரும்பாதவராய் குரு குறிப்பறிந்து மெய்ப்பொருள் ஓர்வராயினர்.

ஒருநாள் யோகநாதர் நல்லூருக்குச் சென்று குருதேவரைத் தரிசித்த பின் கோயில் தேர் முட்டியின் மேற்படியில் தியானத்தில் அமர்ந்திருந்தார். பல நாள்களாக தியானத்தில் அமர்ந்தபின் குருவின் பணிப் பின்படி நல்லூரை விட்டுக் கால் நடையில் காடும், மலையும் கடந்து சென்று கதிர் காமத்தை அடைந்தார். சில தினங்கள் யோகநாதரைக் காணாத சுற்றத்தினர் செல்லப்பா சுவாமிகளிடம் சென்று நம் யோகநாதர் எங்கே என்று கேட்டார்கள். யோகநாதன் செத்தே போனான் என்று செல்லப்பா சுவாமிகள் பதிலளித்தார். மடிந்தார்க்குச் செய்யும் கடன்களெல்லாம் சுற்றத்தார் செய்தார்கள்.

துறவறத்தை மேற்கொண்ட யோகநாதர் கொழும்புத் துறையில், இலுப்பை மரத்தின்கீழ் தனிமையில் இருந்து யோக சுவாமிகளாக இறைவனைத் தியானித்துக் கொண்டே இருந்தார். சில காலத்திற்குப்பின் அடியார்களின் முயற்சியால் வீதி ஓரத்தில் அமைக்கப்பட்ட சிறிய கொட்டிலில் வாழ்ந்து வந்தார். அன்பர்கள் சென்று வழிபட்டு வந்தனர். தன்னை வந்தடைபவர்களுக்குப் புகலிடமாய், கற்பகதருவாய்த் திகழ்ந்தார். செல்வர், அறிஞர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஆடவர், மகளிர், முதியோர், இளைஞர் என அங்கு சுவாமிகளைத் தரிசிக்க வந்தவர்களுக்கு அவர்கள் குறையறிந்து சுவாமிகளும் அருள் புரிந்து வருவாராயினர். சிலரைக் கடிந்து திருத்துவதும் உண்டு.

1964 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் ஆயிலிய நட்சத்திரத்தில் மகாசமாதி எய்தினார். இதையறிந்த சுவாமிகளது அன்பர்கள் இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர். தூயோன் இறுதி யாத்திரையில் துண்டிவரையும் உடன் சென்றனர். சோதி மயமான பின் சாம்பல், என்பு சேமித்து குடத்திலிட்டு கொழும்புத்துறையில் ஐயன் அமர்ந்த கொட்டிலில் சமாதிக் கோயில் கட்டினர்.

யோகசுவாமி எமக்கு விட்டுச் சென்ற அழியாச் செல்வங்கள் சிவதொண்டன் மலர், நற்சிந்தனைகள், சிவதொண்டன் நிலையம் என்பன. 1934 ஆம் ஆண்டு திரு.நடராஜன், கமலாசனி அச்சு நிலையத்தைத் தொடங்கியபோது சுவாமிகளின் பணிப்பின்படி சிவதொண்டன் மலர் வெளியாகியது. இதழ் தொடர்பான பல அலுவல்களைச் சுவாமிகளே கவனித்து வந்தார். சிவதொண்டனின் பெருஞ்சேவை யோக சுவாமிகளின் நற்சிந்தனைகளை வெளி வரச் செய்ததாகும். 1935 ஆம் ஆண்டிலிருந்து இவ்விதழ் தொடர்ந்து வெளி வருகின்றது.

சிவதொண்டன் இதழை நடத்துவதற்கு ஓர் அலுவலகமும் தொண்டர்கள் தியானம் முதலியன நடத்துவதற்கு அமைதியான இடமும் தேவைப்பட்டதால் சிவதொண்டன் நிலையம் வண்ணார் பண்ணையில் சைவசமய நிறுவனங்களுக்கு மத்தியிலும் சைவக் கல்லூரிகளுக்கு அண்மையிலும் 1953 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான்காம் திகதியன்று தொடங்கப்பட்டது.

மக்களிடையே நல்வாழ்வு நிலைபெற்றுச் சமயபக்தி ஏற்படும் பொருட்டு பாத யாத்திரைகள், சமய பிரசங்கங்கள் ஒழுங்காக நிகழ்வதில் ஊக்கங்காட்டியும், மதுவிலக்கினைச் செய்யும்படி அன்பர்களுக்குச் சொல்லியும், உணவிலே தமிழ் மக்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்ய விவசாயத்தில் ஈடுபடவும் பணித்தனர்.

எமது நாட்டில் எமது கண்முன்னே சீவன் முத்தராக வாழ்ந்து சமாதியடைந்த யோகசுவாமிகளின் நற்சிந்தனைகள் வளரவும் சிவதொண்டு செழித்தோங்கவும் தோன்றாத் துணையாக இருந்து திருவருள் புரியும் யோகசுவாமிகளின் திருவடி வாழ்க.

*"குரு பக்தியே பெரும் பேறு*
*கொண்டாடிக் கொண்டாடி ஆறு"*

- செல்வி: யோ.விநாசித்தம்பி

# மருத்துவ உலகுக்குச் சவால் விடுக்கும் புற்றுநோய்

**புற்றுநோய் ஓர் அறிமுகம்**

**புற்றுநோய் என்றால் என்ன?**

இது உடற்கலங்கள், உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம். இது உடலின் எப் பகுதியிலும் ஏற்படலாம்.

**இலங்கையில் புற்று நோய்**

இலங்கையில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஒருவருடத்தில் சுமார் 12000 புதிய புற்றுநோயாளர்கள் இனங்காணப்படுகிறார்கள். பெரும்பாலானோர் பிந்திய



நிலையிலேயே வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**புற்றுநோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?**

* நீண்டகாலம் நிலைத்திருக்கும் இருமல்/குரல் வித்தியாசம்.
* குணமடையாத புண்
* உடம்பில் கட்டு, தழும்பு அல்லது




உண்ணி ஏற்படுதல் அல்லது பலகாலமாக இருந்து திடீரென வளர்ச்சியடைதல்.
* மார்பகங்களில்/வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள் அல்லது தடிப்புகள்.
* பெண் யோனி வழியில் இருந்து அசாதாரண இரத்தம் அல்லது வெள்ளைப் போக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப்போக்கு ஏற்படுதல்.
* மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளிவரல்.
* அதிக காலமாக நீடித்திருக்கும் அஜீரணம் (சமிபாட்டின்மை) அல்லது விழுங்குவதில் உள்ள கஷ்டம்.

**புற்றுநோய்க்கான காரணிகள் யாவை?**

புற்றுநோய்க்கான சரியான காரணிகள் எவையென இன்னமும் கூற முடியாதுள்ளது. எனினும் புற்று நோயானது வாழ்க்கை முறை, பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத்தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

**புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான பாதகமான காரணிகள்**

*1. புகையிலை பாவித்தல்*

இதனைப் புகைப்பதினாலோ, அப்புகையை

> உலக சுகாதார ஸ்தாபனமும் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மற்றும் யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவப் பிரிவு ஆகியன இணைந்து வழங்கும் வழிகாட்டுதல்கள் இவை.

அருகில் இருந்து உள்வாங்குவதனாலோ அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்ளுவதனாலோ பாதிப்பு ஏற்படும்.

*2. மதுபானம் அருந்துதல்*

இதன் எரிவுத்தாக்கத்தால் வாய், களப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்படைந்து ஈற்றில் ஈரற்புற்றுநோய் ஏற்படும்.

*3. மாறுபட்ட உணவுப் பழக்கம்.*

*4. வாய்ச்சுகாதாரம் இன்மை.*

*5. இரசாயனப் பதார்த்தங்கள்.*

அதிககாலம் இவற்றைக் கையாண்டு வேலை செய்வோருக்கு, குறிப்பாக இரத்தப் புற்றுநோய் மற்றும் சிறுநீர்ப்பைப் புற்றுநோய் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

*6. பெண்கள் மாதவிடாய் நின்றபின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.*

*7. சூரியனில் இருந்துவரும் UV கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள்.*

*8. அணுக்கதிர்த் தாக்கம்.*

*9. புற்றுநோயாளரின் நெருங்கிய உறவினராயிருத்தல்.*

ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப்புற்றுநோய், குடற்புற்றுநோய் மற்றும் இரத்தப்புற்றுநோய் என்பன பரம்பரை ரீதியாகக் கடத்தப்படுகின்றன.

*10. நல்ல உடற்பயிற்சியின்மை.*

**வாய்ப்புற்றுநோய்**

இது வயது முதிர்ந்தோரை அதிகம் பாதிக்கின்றது. புற்றுநோய் முன்னிலைகளான உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற/செந்நிற தழும்புகளை கண்ணாடியில் பார்த்து இனம் காணமுடியும். இவ்வாறு இனம் காணப்படுமிடத்து வைத்தியரை நாடி குணமாக்கும் வகையிலான பூரண சிகிச்சை பெறக் கூடியதாகவிருக்கும். அவ்வாறன்றி பிந்திய நிலையில் புற்றுநோய் இனம்' காணப்படுமாயின் சிகிச்சை பலனளிக்காதென்பது குறிப்பிடத்தக்கது.

**வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்**

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை போன்றவற்றை மெல்லுதல்.
2. பீடி, சுருட்டு, சிகரெட் புகைத்தல்.
3. ஒழுங்கற்ற வாய்ச்சுகாதாரம்.
4. மதுபானம் அருந்துதல்.
5. பின்வரும் சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உறுத்தலினால் உண்டான புண்.
   - கூரான உடைந்த பற்கள்.
   - சரியான அளவில் செய்யப்படாத செயற்கைப் பற்கள்.
6. அதிகளவான மிளகாய், மிளகாய்த் தூள் பாவித்தல்.
7. பீடை கொல்லி போன்ற இரசாயனப் பதார்த்தங்களினை அதிகளவில் பாவித்தல்.
8. சூரிய ஒளியின் UV கதிர்களின் தாக்கம் - குறிப்பாக உதடுகளில் ஏற்படும்.
9. போசாக்குக் குறைபாடு.

## நோய் அணுகாதிருக்க ஒழுங்கான வாழ்க்கை முறை உதவும்

**வாய்ப்புற்றுநோயின் அறிகுறிகள்**

* ஆறாத வாய்ப்புண்.
* வாயினுள் தடித்துக் காணப்படும் வெள்ளை, சிவப்பு நிறமான தழும்புகள்.
* வாய்க்குழியின் கவசத்தோல் கழன்று போதல்.
* உதடுகளிலோ, வாயினுள்ளோ வளரும் தசைத்துண்டுகள்.
* வழமைக்கு மாறான இரத்தக்கசிவு.
* மெல்லுதலிலும் விழுங்குதலிலும் ஏற்படும் சிரமம் அல்லது வலி.
* தெளிவான காரணங்கள் அற்ற நிலையில் பற்களின் உறுதி தளருதல்.
* தாடையை அசைப்பதில் சிரமம்.
* வாய்க்குழி உணர்வற்றுப்போதல்.
* கழுத்துப்பகுதியில் நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல்.

**நீங்களே உங்கள் வாயைப் பரிசோதிக்கலாம்!**

* உங்கள் கைகளை சுத்தமாகக் கழுவுங்கள்.
* முகம்பார்க்கும் கண்ணாடி முன்பாக நில்லுங்கள்.
* உங்கள் முகத்தில் ஏதேனும் வீக்கங்கள், கட்டிகள், புண்கள் உள்ளனவா என விரல்களின் நுனியினால் சோதித்துப் பாருங்கள். முகம் சமச்சீராக உள்ளதா எனக் கவனியுங்கள்.
* உங்கள் மேல், கீழ் உதடுகளை நன்கு இழுத்து அவற்றில் சிவப்பு, வெள்ளை புள்ளிகள், வீக்கங்கள் அல்லது கட்டிகள், நோவுள்ள பகுதிகள் உள்ளனவா என்பதைப் பார்த்தும், கைவிரல்களின் உதவியுடனும் பரிசோதியுங்கள்.
* உங்கள் முரசுகளில் ஏதேனும் நிற மாற்றங்கள், வீக்கங்கள், கட்டிகள், புண்கள், இரத்தக்கசிவு என்பன உள்ளனவா எனப் பார்த்தும் தொட்டும் உணருங்கள்.
* உங்கள் கடைவாயை வெளிப்பக்கத்துக்கு கையினால் நன்கு இழுத்து வாய்க்குழியின் உட்பக்கச்சுவரில் ஏதேனும் வீக்கங்கள், புண்கள்/நிற மாற்றங்கள் உள்ளனவா எனப் பரிசோதியுங்கள்.
* நாக்கை நன்கு வெளியே நீட்டியும் பக்கப்புறங்களுக்கு இழுத்தும் அதில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏதாவது உண்டா என நன்கு பரிசோதியுங்கள்.
* வாயை நன்றாக - திறந்து அண்ணத்தை, தொண்டை மூளையை (Tonsil) உண்ணாக்கு ஆகியவற்றைப் பார்த்து மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏதாவது உண்டா எனப் பார்த்தும் தொட்டும் உணருங்கள்.
* நாக்கை உயர்த்தி வாய்க்குழியின் அடிப்பகுதியில் மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா எனப் பரிசோதிக்கவும்.

மேற்படி பரிசோதனையை மாதத்திற்கு ஒருதடவையேனும் செய்து ஏதேனும் சந்தேகத்துக்கிடமான மாற்றங்கள் காணப்பட்டால் வைத்தியரை நாடி ஆலோசனை பெறவும்.

தகுந்த சுகாதார பழக்கவழக்கங்களை கைக்கொள்ளுவதன் மூலமும், வாய்க்குழியைச் சுயமாகப் பரிசோதித்து புற்றுநோய் முன்நிலைகளை முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலமும், சரியான பற்சிகிச்சை பெறுவதன் மூலமும் வாய்ப் புற்றுநோய்க்கு ஆளாவதிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்.! *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்குக் கடன் வழங்குவதற்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் தயாரில்லையாம்

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஏப். 05

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்படுவதாலும் பெறப் போகும் சர்வதேச கடன்களை அடைப்பதற்கு வழி இல்லாததாலும் சர்வதேச நிதி நிறுவனங்கள் எவையும் இலங்கைக்கு கடன் உதவிகளை வழங்கமாட்டா என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. வஜிர அபயகுணவர்த்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அதன் இரண்டு வருட ஆட்சியில் ஆக்கபூர்வமான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டது. அரச சேவைக்கு அதிக எண்ணிக்கையானோரை இணைத்துக் கொண்டதோடு அரச ஊழியர்களுக்கு 25 ஆயிரம் வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டம் ஒன்றையும் நாம் ஆரம்பித்தோம்.

இதன் முதற்கட்டமாக ஆயிரத்து 500 வீடுகள் நிர்மாணிக்கும் பணி காலியில் ஆரம்பிக்கப் பட்டது. அந்த வீடுகளை இப்போது ஜனாதிபதி திறந்து வைக்கின்றார். அவரே இத்திட்டத்தை ஆரம்பித்தார் என்று அரசு கூறுகிறது.

இந்த வீட்டுத்திட்டம் ரணில் சிந்தனையில் ஆரம்பிக்கப்பட்டு மஹிந்த சிந்தனையில் திறந்து வைக்கப்படுகிறது.

இன்று நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. பணத்துக்காக வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

பெறப்படும் கடனை அடைக்கக் கூடிய ஆற்றல் இருந்தால்தான் யாரும் கடன் வழங்க முன்வருவர்.

இலங்கை அரசு கடன் பெற்றால் அதை அடைக்கக்கூடிய எந்த வழியும் அரசிடமில்லை. அப்படியிருக்கும் போது எந்த நிதி நிறுவனங்களும் அரசுக்குக் கடன் வழங்காது - என்றார். (சி)

# வேலாயுதம் ம.வி.யில் கணனிக் கற்கை நெறிகள்

வடமராட்சி, ஏப்.5

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் கணனி கற்கை நெறிகள் ஆரம்பமாகியுள்ளன.

இக்கற்கை நெறியில் இணையத்தின் ஊடான கற்றல் வசதி, சிறுவர்களுக்கான ஆரம்ப கணனிப் பயிற்சி என்பன நடைபெறுகின்றது.

(204-236)



## திருமண வாழ்த்து

இன்று (05.04.2009)
ஞாயிற்றுக்கிழமை இல்லறம்
என்னும் நல்லறத்தில்
இரு மனமும் இணைந்து
திருமணம் காணும்
**பிரதீஸ்வரன் (ரமேஷ்)**
**தர்ஷினி**
தம்பதியர்
ஆல்போல் தழைத்து
அறுகுபோல் வேர் ஊன்றி
பதினாறும் பெற்றுப்
பல்லாண்டு காலம்
பெரு வாழ்வு வாழ
எல்லாம் வல்ல
கைதடி வீரகத்திப்
பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள்.
கைதடி.

(84146)

## 1ஆம் ஆண்டு திருமண வாழ்த்து



திரு. திருமதி
**S.S.இரமணீதரன் கார்த்திகாயினி**
(E.S., இலங்கை மின்சார சபை, சுன்னாகம்)
11.04.2009 சனிக்கிழமை 2ஆம் ஆண்டு
திருமண பந்தத்தில் அடியெடுத்து வைக்கும்
தம்பதியரைப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

வதிரி, நெல்லியடி. (841334) நண்பர்கள்.


## கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

### விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், V- Cut, U- Cut, Step வடிவங்களில் முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், 6 முறைகளில் சேலை அணிதல். கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் தீட்டுதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

தங்கள் வசதிகளுக்கேற்ப கிழமை நாள் அல்லது சனி, ஞாயிறு பயிலமர்வுகளில் கலந்து கொள்ளலாம்.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 09-04-2009 காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.



BOC
லங்கா பெங்குவ இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 10.07.2008 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 10.01.2008இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி, இடம், நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2009 ஏப்ரல் 11ஆம் திகதி (சனி) காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3126,
021 222 2735.

உதவிப்பொது முகாமையாளர்
(இலங்கை வங்கி வட பிராந்தியம்).
(அ/557758)






ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!

நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

**லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில**

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் நைஸ் என்னும் பல

*Manufactured By:*
**Luckyland**
*Biscuit Manufactures*
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினை : ஐ.நா. தீர்க்க முடியுமா?

உலக அளவில் இலக்கியத்துக்காக அளிக்கப்படும் முக்கிய விருதுகளில் 'புக்கர்' பரிசும் ஒன்று. சில வருடங்களுக்கு முன்பு 'தி காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ்' என்ற தன்னுடைய நாவலுக்காக இந்த விருதை வாங்கியவர்



அருந்ததி ராய்.

இந்தியாவின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான அருந்ததி ராய். இன்று, இலக்கியப் பணிகளுக்கிடையே சமூகத்தின் தீவிரப் பிரச்சினைகள் குறித்து பேசுவதுடன் அவற்றுக்கெதிராக களமிறங்கி சமூக சேவையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இலங்கைப் பிரச்சினை குறித்து மேடைகளில் முழங்கத் தொடங்கியிருக்கும் இவர், கடந்த 30 ஆம் திகதி சென்னைக்கும் வந்திருந்தார். எழுத்தாளரும் எம்.எல்.ஏ-வுமான ரவிக்குமார் அவரை சந்தித்துப் பேட்டி கண்டார்.

*கேள்வி:* ''இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையை உலகின் வேறு எந்த கொடூரத்தோடு நீங்கள் ஒப்பிடுவீர்கள்?''

*பதில்:* ''பாலஸ்தீனத் தாக்குதலுக்கும், இலங்கையில் நடைபெறும் படுகொலைகளுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால், இரண்டையும் நாம் ஒப்பிட முடியாது. அப்படி ஒப்பிடும்போது ஈழத்தமிழர்களின் தனித்துவமான சிக்கல்களை நாம் பார்க்கத் தவறிவிடுவோம். எனவே, ஈழத்தமிழர்கள் பிரச்சினையை நாம் தனி முக்கியத்துவம் அளித்துப் பார்க்க வேண்டும் என்பதே என் கருத்து.''

*கேள்வி:* ''இலங்கையிலுள்ள நிலைமை எப்படி இருக்கிறது?''

*பதில்:* ''நான் அறிந்துள்ள செய்திகளை வைத்துப் பார்த்தால் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழிக்கிறேன் என்ற பெயரில் அந்த நாட்டில் ஜனநாயகத்தை அழித்து வருகிறது. தமிழ் மக்களுக்கு எதிராக சொல்லமுடியாத குற்றங்களை இழைத்து வருகிறது. தமிழர்கள் ஒவ்வொருவரும் பயங்கரவாதிகள்தான் என்ற எண்ணத்தில் மக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள் எல்லாவற்றின் மீதும் குண்டுகளை வீசி வருகிறது. நம்பகமான தகவல்களின் அடிப்படையில் பார்த்தால் சுமார் இரண்டு லட்சம் தமிழர்கள் இப்போது போர் நடக்கும் பகுதிக்குள் மாட்டிக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.''

*கேள்வி:* 'போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேறி வரும் தமிழர்களுக்காக இலங்கை அரசு முகாம்களை அமைத்துத் தந்திருப்பதாக சொல்கிறதே?''

*பதில்:* ''ஆமாம், அப்படி பல பாதுகாப்பு கிராமங்கள் உருவாக்கப் பட்டிருப்பதாக அறிகிறேன். இதுகுறித்து 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகையில் வந்துள்ள செய்தி,



அந்த கிராமங்களெல்லாம் ஹிட்லர் அமைத்த வதை முகாம்களைப் போன்றவை என்று தெரிவிக்கிறது. இலங்கையின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீராவும் இதையே உறுதிப்படுத்தியிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்னால் கொழும்பு நகரில் வாழும் தமிழர்கள் அனைவரும் அரசாங்கத்திடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் இலங்கை அரசு கூறியது. இப்படி செய்வது ஹிட்லர் செய்ததைப் போன்றது என்று மங்கள சமரவீராவும் கூறியிருக்கிறார். இந்தியாவின் மற்றைய பகுதிகளுக்கு இந்த துயரத்தின் முழுப் பரிமாணமும் எட்டவில்லை என்பது வேதனையளிக்கும் நிஜம்.''

*கேள்வி:* ''முடியாத அவல நாடகமாகத் தொடரும் ஈழத் தமிழர் பிரச்சினையில் ஐ.நா.சபை போன்ற சர்வதேச அமைப்புகள் ஆற்ற வேண்டிய பாத்திரம் இருக்கிறது என்று கருதுகிறீர்களா?''

*பதில்:* ''ஐ.நா. சபை போன்ற அமைப்புகள் இன்றைய உலகச்சூழலில் பெரிதாக எதுவும் செய்துவிட முடியும் என்று தோன்றவில்லை. பாலஸ்தீனப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், அங்கு ஐ.நா-வின் செயல்பாடு என்பது பெரும்பாலும் இஸ்ரேலுக்கு ஆதரவானதாகவே இருந்து வந்துள்ளது. எனவே, அங்கே ஐ.நா. சபை தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை என்னால் ஏற்கமுடியவில்லை. இலங்கைப் பிரச்சினையின் தன்மை வேறுபட்டது. இங்கு ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவது பற்றி பெருமளவில் வெளியுலகுக்கு தெரியாத நிலை உள்ளது. எனவே, இலங்கையில் ஐ.நா. தலையிட்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த ஐ.நா. தலையிடுமேயானால், நிச்சயம் அதற்கு ஒரு பலன் இருக்கும்.''

*கேள்வி:* ''தமிழகம் நீங்கலாகப் பார்த்தால், இந்திய ஊடகங்களில் இந்த சோகம் பற்றி ஒருவித மௌனம் நிலவுகிறதே... ஊடகத் துறையில் வட இந்திய சார்புதான் இதற்குக் காரணமா?''

*பதில்:* ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அரசாங்கம் எதைச் சொன்னாலும் அதை ஊடகங்கள் அப்படியே வழிமொழிகின்றன. ஈழத்தமிழர் பிரச்சினையை பொறுத்தமட்டில் மொழிப் பிரச்சினையும் இருக்கிறது. தமிழ், இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய ஊடகங்களுக்கிடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. தமிழில் வெளியாகும் பலவிஷயங்கள் இந்தியாவின் பிற பகுதிகளை எட்டுவதில்லை. அதை ஆங்கில ஊடகங்கள் எடுத்துச் சொல்வதுமில்லை. மொழிரீதியான



இந்தப் பெரிய இடைவெளி, ஈழத்தமிழர் பிரச்சினை வெளியுலகுக்குத் தெரியாமல் இருப்பதற்கு ஒரு காரணம் என்று கருதுகிறேன்.''

*கேள்வி:* ''ஈழத் தமிழர் பிரச்சினையில் உங்களைப் போன்ற அறிவு ஜீவிகளின் கடமையாக எதைக் கருதுகிறீர்கள்?''

*பதில்:* ''அறிவு ஜீவிகளுக்கென்று தனியே ஒரு பணி இருப்பதாக நான் எப்போதும் கருதவில்லை. சமூகத்தின் மற்ற பிரிவினரைவிட அறிவு ஜீவிகளுக்கு சிறப்பாக தனி முக்கியத்துவம் இருப்பதாகவும் எண்ணவில்லை. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் அறிவு ஜீவிகள் எல்லோரும் முற்போக்காக இருந்தார்கள் என்றோ, மனித நேயத்தோடு நடந்து கொண்டார்கள் என்றோ நாம் சொல்லிவிட முடியாது. ஈழப் பிரச்சினையைப் பொறுத்தவரை எல்லோருக்குமே ஒரு பொறுப்பிருக்கிறது. மக்கள் எல்லோரும் முன்வந்து இதில் செயல்பட வேண்டும் என்பதையே நான் வலியுறுத்துகிறேன். ஈழத்தமிழர் பிரச்சினை போன்றவை மிகவும் ஆழமான காரணங்களைக் கொண்டிருக்கின்றன. அவற்றை யாரும் குறுகிய அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்துவது சரியல்ல. ஈழத் தமிழர்களின் துயரம் என்பதுதான் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். அதைத் தீர்ப்பதற்கான வழிகளைத் காண்பதுதான் முக்கியம். இது அறிவு ஜீவிகளுக்கு மட்டுமல்ல, மக்கள் அனைவருக்குமே முக்கியமான கடமை என்று எண்ணுகிறேன்.''

*நன்றி : விகடன்*



## தவக்காலச் சிந்தனை



## ஒருவர் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும்....

இந்த உலகம் நுகர்வு கலாசாரத்தில் சிக்குண்டு போட்டிபோட்டுக் கொண்டு வளர்ந்து செல்கிறது என நினைத்தாலும் அழிவின் பாதையில் தன் இருப்பை நிறுத்தி அசைகின்றது. பூமியின் சுழற்சி வேகத்தில் மனிதனின் தேவையும் அதிகரிக்க, அதிகரிக்க மனிதன் அதனைப் பூர்த்தி செய்து கொள்ள பல வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றான். இந்த வழிகள் அனைத்தும் நேர்மையான வழிகளாக இருக்கவில்லை என்பதுதான் உண்மை. இதனால் தான் உலகில் போரும், சண்டைகளும், அழிவுகளும், பட்டினியும், பசியும், கொலையும், கொள்ளையும் அரங்கேறுகின்றன.

எந்தத் தீமையாவது செய்து மனச்சாட்சியைக் கொலை செய்துவிட்டு உலகின் செல்வத்தை தமதாக்கிக் கொள்ள மனிதன் முயற்சி செய்கிறான். ஆனால் இந்த உலகம் செல்வத்தையும், பதவியையும், புகழையும் தேடி அலையும் பாதையில் தனது மனச்சாட்சியை கொலை செய்துவிட்டு தன்னுடைய ஆன்மாவை அழிந்துவிடும் என்றால் அதனால் வரும் பயன் என்ன? மனித வாழ்வு இந்த உலகத்தோடு முடிந்துவிட்டாலும் மறுவுலக வாழ்வு உண்டு என்பது நிச்சயம். அதுவே நிரந்தரம். ஏனெனில் நாம் போய்ச்சேர வேண்டிய இறுதி இலக்கு அதுதான்.

எம்மைப் படைத்த இறைவனோடு நாம் சங்கமம் ஆகவேண்டும். எமது ஆன்மா மட்டுமே எமது வாழ்வில் அழியாதது. எனவே அழியாத ஆன்மாவை உலகின் செல்வங்கள், ஆசைகள் என்பவற்றால் கறைப்படுத்தினால் அதனை நாம் இழந்து விடுவோம். ஓடி, ஓடி உழைத்துச் செல்வத்தையும், புகழையும் சேர்த்தாலும் மனதினில் அமைதியும், வாழ்வினில் மகிழ்ச்சியும் தங்காது. ஆனால் மனித வாழ்வில் மனிதத்தை வாழ்ந்து, மனட்சாட்சியை வளர்த்து, ஆன்மாவைக் காக்கும் போதுதான் நாம் வாழ்வை கண்[illegible]. [illegible] அழியும் செல்வங்களைக் கொண்டு அழியாத விண்ணக வாழ்வை [illegible] தொடங்குவோம்.

அருட்திரு. அ. யோசேஸ்நாதன்.

## வரலாற்றில் தடம்பதித்த பல இலங்கையர்களை உருவாக்கிய பரியோவான் கல்லூரி

### நல்லூரிலேயே முதலில் இயங்கி வந்தது

### இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆரம்பத்தில் நல்லூரிலேயே இயங்கி வந்தது. 1823ஆம் ஆண்டு வணக்கத்துக்குரிய அட்லி (Revd. william Adley) பாதிரியாரால் ஆண்களுக்குரிய ஆங்கிலப் பாடசாலையாக இது ஆரம்பிக்கப்பட்டது.

Church missionary society ஆல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பெண்களுக்கு விடுதிப் பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் நோக்குடன் 1841ஆம் ஆண்டு சுண்டிக்குளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 1846ஆம் ஆண்டு தற்போது பரியோவான் கல்லூரி அமைந்துள்ள பரியோவான் தேவாலயத்துடன் இணைந்த கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பரியோவான் கல்லூரி விளையாட்டு மைதானக் காணியில் ஒரு பகுதி அப்போதைய பிரிட்டிஷ் அரசால் வழங்கப்பட்டது.

1876ஆம் ஆண்டு வணக்கத்துக்குரிய வூட் (Revd D.Wood) மேலும் சிறிதளவு காணியைக் கொள்வனவு செய்தார். 1888ஆம் ஆண்டு வணக்கத்துக்குரிய பிளெமிங் (Revd. [illegible]) பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் விடுதியொன்றைக் கட்டினார். [illegible] கல்லூரி வரலாற்றில் தடம் பதித்த இலங்கையர்கள் பலரை உருவாக்கியுள்ளது.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்கில் செஞ்சிலுவைப் புதிய அலுவலகம் திறப்பு

அச்சுவேலி, ஏப்.5

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. கிழக்குப் பிரிவுக்கான புதிய அலுவலகத் திறப்பு விழா இன்று மு.ப. 10மணிக்கு பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. கிழக்குப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் அருட்தந்தை கலாநிதி ஈ.ஜே.ஜெயரட்ணம் அடிகள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (1-11)


## தங்கநிலா விளையாட்டுக் கழகம்

13ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும்

**மெ பெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (ஓவர்கேம்)**

06 பேர் கொண்ட போட்டிகள்

**முதலாம் பரிசு**
வெற்றிக் கேடயத்துடன் ரூபா 10, 000

**இரண்டாம் பரிசு**
வெற்றிக் கேடயத்துடன் விளையாட்டு உபகரணங்கள்.

04 பேர் கொண்ட போட்டிகள்

**முதலாம் பரிசு**
வெற்றிக் கேடயத்துடன் ரூபா 10, 000

**இரண்டாம் பரிசு**
வெற்றிக் கேடயத்துடன் விளையாட்டு உபகரணங்கள்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
இல.288, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 1751495
விண்ணப்ப முடிவு திகதி: 20.04.2009.

(84165)


## மரண அறிவித்தல்

### திருமதி சிறீபதி கயல்விழி



பெரியமாவடி, கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறீபதி கயல்விழி 02.04.2009 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சிறீபதியின் அன்பு மனைவியும் சங்கவியின் அருமைத் தயாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சொர்ணம்மா (சுவிஸ்) தம்பதியினரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் மலர்விழி (ஜேர்மனி), சொர்ணலிங்கம் (கனடா), பாஸ்கரலிங்கம் (முருகன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரதாஸ் (ஜேர்மனி), கலாவதி (கனடா), பேரின்பவதனி (சுவிஸ்), சிறீஸ்கந்தராஜா (USA) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிர்மலாவின் (USA) சகலியும் கீர்த்தனா, கிருசாந், கீர்த்திகா (ஜேர்மனி), பிரசன்னா, பிரசாத் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் பிரணவன், சிவகாமி (கனடா), லோகிதன், புவிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் உள்ள 256, Kingsten Road, St.Jones Cymetry இல் நாளை (06.04.2009) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு,
சிறீபதி - 001 4162771967
சொர்ணலிங்கம் - 001 6472892272
சந்திரதாஸ் - 0049 72644420
பாஸ்கரலிங்கம் (முருகன்) - 001 416312070
சிறீஸ்கந்தராஜா - 001 9546756883

தகவல்:
கனகசபை இந்திராதேவி
(சித்தப்பா, சித்தி).


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம், 27 வயது, மிருகசீரிட நட்சத்திரம், B.Sc. in Information Technology and doing Masters. Australian Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை. இது ஒரு திருமணசேவை (www.thaalee.com)Profile Number 5125 போன் - 2523127, 2520619

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, ஆயிலிய நட்சத்திரம், Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை. 1 இல் செவ்வாய் உள்ளது. இது ஒரு திருமண சேவை. (www.thaalee.com) Profile Number 5378, T.P.: 2523127, 2520619

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் , 29 வயது, சதய நட்சத்திரம், B.Sc., Computer Engineer, U.K. Citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை. இது ஒரு திருமண சேவை. (www.thaalee.com) Profile Number 5756, T.P.: 2523127, 2520619

## எழுதுநர் வெற்றிடம்

அச்சகம் ஒன்றில் சிட்டை எழுதுவதற்கும் மற்றும் புத்தகங்கள் பொதி செய்யக் கூடியவர் (பெண்) தேவை. தொலைபேசி எண்ணுடன் விண்ணப்பிக்கவும்.

* மாத வேதனம் ரூபா 5000/=

வி.இல. 5189,
C/O உதயன்.

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

U.K. Citizen யாழ். இந்து கௌரவ குடும்பம், 39வயது, பரணிநட்சத்திரம்செவ்வாய்க்குற்றமற்றவர். கம்பனி ஒன்றில் வேலை பார்க்கிறார். A/L படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

லண்டன் தொடர்பு: 00447536717775

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு, கார்த்திகை 2 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லை, கிரகபாவம் 17, சிங்கப்பூரில் PR உடன் இலத்திரனியல் பொறியியலாளராகக் கடமையாற்றும் மகனுக்குப் பெற்றோர் B.Sc. (கணனி), Cima கணக்காளர், வைத்தியர் மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:E-mail: Sairam ak 80 @ gmail.com

வி.இல. 5891,
C/o உதயன்.

## ஐங்கரன் திருமண சேவை

எம்மிடம் அமெரிக்கா Citizen 37 வயது, U.K. Citizen 32, 28 வயது, கனடா Citizen 42, 40 வயது, பிரான்ஸ் Citizen 27 வயது, கொலண்ட் Citizen 31 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166,
00447508295863
Fax No.: 00442086810701
00442086720673

## www.thaalee.com (இது ஒரு திருமண சேவை)

மணமக்களே!

இன்றுடன் உங்கள் திருமணப் பேச்சு வார்த்தையில் உள்ள சிரமங்கள், தாமதங்கள், சிக்கல்கள் என்பவற்றைத் தீர்த்துக் கொள்ள விரும்பினால் உடனே எமது www.thaalee.com என்கிற website ஐ நாடுங்கள். இதில் பல்லாயிரக் கணக்கான மணமக்களுடைய படங்கள், ஜாதகம் மற்றும் சகல விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்துகொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். மேலும் உங்களுடைய Profile ஐ நீங்களே இதில் பதிவு செய்து கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு எம்மை நேரடியாக நாடுங்கள் அல்லது படம், ஜாதகம், முழுவிவரம் என்பவற்றை எமது விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் ஆவன செய்வோம்.

S.Sarma j.p. 45/1, Madampibiya Road, Colombo - 15
போன் - 2523127, 2520619


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோஜாதேவி இராசகுமாரன்

(ஆசிரியை, யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி)

திருமதி சறோஜாதேவி இராசகுமாரன் நேற்று (04.04.2009) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இராசகுமாரனின் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்) அன்பு மனைவியும் பார்கவியின் (மாணவி, காமெல் முன்பள்ளி) பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செந்தூரம், VM.றோட், பருத்தித்துறை.
கேணியடி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே: 060 221 4818

தகவல்: அ.இராசகுமாரன்
(விரிவுரையாளர், ஆங்கிலமொழிப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்)

### நாகலிங்கம் அம்பிகைபாகன்

(அம்பிகா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



மாவிட்டபுரம், வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, முத்தட்டுமட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அம்பிகைபாகன் 02.04.2009 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் மயில்வாகனம் - நல்லம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இராமநாதன் மற்றும் கனகலிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, சண்முகநாதன், யோகராசா (அம்பிகா ஸ்ரோர்ஸ்), பூபாலராசா, இரத்தினமலர் (கனடா), குணநேசன் (அம்பிகா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் அமிர்தினி, கோபாலகிருஸ்ணன், தர்மகிருஸ்ணன், அனோஜன் (யாழ். கல்வித் திணைக்களம்), கேதீசன், கோசலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்: மனைவி
(நாகரத்தினம்).

### திருமதி கனகசபை தங்கச்சியம்மா



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தங்கச்சியம்மா 03.04.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் சிவானந்தம், இராசலட்சுமி காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் விஜயலட்சுமி, பரஞ்சோதி, பரமேஸ்வரி (Germany), பத்மராணி (Germany), சற்குணராஜா (London), கிருஸ்ணகுமார் (Swiss), பாஸ்கரன் (France) ஆகியோரின் தாயாரும் மீனலோஜினி, குகதாசசிங்கம், ரோகினி, காஞ்சனாதேவி (Swiss), றதி (London), ரோகினி (Germany), ஜெயலிங்கராஜா, ஞானேஸ்வரன் (Germany), குகன் (Germany) ஆகியோரின் மாமியாரும் கயானன், நந்தினி, கஜேந்தினி, கஜீபன், சாமினி, வாகினி, நிரோஜனி, ஜெறோசன், மதன், மோர்ஷன், வர்ஷா, நிசாந்தன், ஜெயந்தன், றேசன், சிந்துஜா, அனோஜா, சானுஜா, சஞ்சு, அனுஷா, தனுஷா, அனுதர்சன், அனுதர்சா, சுபா, கிருஷா, சாருமதி, பாருஜன், பாருஜா, பிரெக்சனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நினைவலைகள்

10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 * 10 * 1935
மறைவு 06 * 02 * 2008



**றோ.மனவல்**



**ம.றோசம்மா**

தோற்றம் 18 * 08 * 1941
மறைவு 05 * 04 * 1999

ஆண்டுகள் பத்து ஆனாலும்
ஆறாது அம்மா உம் பிரிவு
எம் உயிரது உள்ள வரை
உள்ளத்தில் என்றும் நீர் இருப்பீர்

இல.3, அடப்பன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## சிவயோக சுவாமிகளின் குருபூசை நன்னாளில்
## ஏழாம் ஆண்டு நினைவுகளில்

பிறப்பு 23 * 02 * 1924
இறப்பு 19 * 12 * 2001





பிறப்பு 03 * 02 * 1930
இறப்பு 25 * 03 * 2002

அமரர் சுவாமிநாதர் பாலசிங்கம் திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்
(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை) திதி: ஏகாதசி

ஆண்டுகள் ஏழு சென்றதுவோ ஆறுமோ எம் நெஞ்சம்
ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன உங்கள் அன்பிற்கு ஈடாகுமோ?
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## குடாநாட்டில் மேம்பட வேண்டிய தொழிற்கல்வி

இன்றைய மாணவர்கள் நாளைய எமது பிரஜைகள். அவர்களின் எதிர்காலம் சிறப்புறுவதற்கான கல்வி அத்திபாரம் இப்போதே இடப்பட வேண்டும். அத்திபாரம் ஸ்திரமாக, உறுதியாக இருந்தாலேயே கட்டடம் பலமானதாக நின்று பல காலங்களுக்குப் பயன்படும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கை சிறப்படைவதற்கு, வளம் காண்பதற்கு தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏட்டுக் கல்விக்கு வழங்கப்படும் சமபங்கு தொழிற் கல்விக்கும் கொடுக்கப்படவேண்டும் என்ற கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுகள் பல கடந்து விட்டன. ஆனால், வளர்ச்சியடைந்த மேலை நாடுகளைப்போன்று மாணவர்களை அவரவர் தொழில் ஆற்றலுக்கும் செயற்றிறனுக்கும் ஏற்ற, தொழிற் கல்விக்கு உரிய வயதில் ஆற்றுப்படுத்தும் கல்விமுறை இலங்கையில் இன்னமும் நிறைவு நிலை கண்டதாக இல்லை.

வெறும் ஏட்டுக்கல்வித் திட்டத்தை மாணவர்களை நாடவைத்து, அவர்கள் அதில் சறுக்கிய பின்னரே, பயிற்சியுடன் கூடிய தொழிற் கல்விக்கு 'தள்ளிவிடும்' ஒவ்வாத முறை இன்னமும் தொடர்கிறது.

மேலை நாடுகளைப் போன்று மாணவர்களின் திறமை மற்றும் ஆற்றலுக்கு ஏற்ப அவர்களை இளம் வயதில் இருந்தே தொழிற் பயிற்சிக்கு ஆற்றுப்படுத்தும் கல்விக்கு முதன்மையிடம் இங்கு அளித்திருந்தால், மாகாண , மாவட்ட மட்டங்களின் பல தொழிற்கல்விப் பல்கலைக்கழகங்களும் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் அவரவர் திறமைக்கேற்ப தொழில் சார் பயிற்சி பெற்ற பட்டதாரிகளாக நாட்டு வளத்துக்கு உதவும் பிரஜைகளாக மாறி இருப்பர்.

எப்படியோ,தொழிற் பயிற்சி சார் கல்வி முறைக்குப் பிரதான இடம் அளிக்க வேண்டிய அவசர அவசிய தேவை இலங்கையின் தமிழர் பிரதேசங்களில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், முன்னர் எப்போதையும் விட இப்போது தோன்றியுள்ளது.

குடாநாட்டு மக்களின் தொழில்களும் வருமானம் ஈட்டுதலும் காலத்துக்கு காலம் மாற்றம் கண்டிருக்கின்றன. கால ஓட்டத்துக்கு - கால முன்னேற்றத்துக்கு ஏற்ப - பாரம்பரிய தொழில்கள் குறைந்து அரச சேவை உத்தியோகம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் உத்தியோகம் என்று தொடங்கி மேற்கு நாடுகளில் உத்தியோகம், புலம்பெயர்ந்தோர் மூலம் வருமானம் என்று பண வளம் தொடர்ந்து இங்கு வந்து சேர்ந்தது.

அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்களின் இனப்பாகுபாட்டு நடவடிக்கைகளால் பெரும் எண்ணிக்கையில் தமிழ் இளைஞர்கள் உலகத்தின் ஐந்து கண்டங்களுக்கும் புலம்பெயர்ந்துசெல்ல நேர்ந்தது. அதனால், குடாநாட்டின் பொருளாதார வளத்துக்கு வளம் சேர்க்கும் ஒருவகை 'கொழு கொம்பு' ஆதாரமாக அவர்களின் வருமானம் விளங்கியது.

ஆனால், அந்த வருமான வாய்ப்புகள் சிறிது சிறிதாக அருகி, இப்போது முற்றாகக் கருகி சாய்ந்து விடும் சாத்தியம் அதிகரித்து வருகிறது!

உலகப் பொருளாதார நெருக்கடி உச்சாணிக் கொப்பில் ஏறிவிட்டது. கைத்தொழில் அபிவிருத்தி நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகள் என்ற வகுத்தல்களுக்குள் அடங்கி உயர்ந்து நின்ற நாடுகள் எல்லாம், இப்போது தலை சாய்ந்து நிலத்தை நோக்கிக் குனிந்து நிற்கின்றன.

குடாநாட்டின் இதுவரையான பொருளாதாரத்தின் வளத்தில் ஊன்றுகோலாக நின்ற, பலகுடும்பங்களுக்கு சோறு போட்ட, புலம்பெயர்ந்த உறவுகளின் வருமானம் குன்றி விட்டது. அதாவது வெளிநாடுகளில் இருந்து எமது புலம்பெயர் உறவுகளிடம் இருந்து கிடைக்கும் பண வளம் ஸ்தம்பித்து போகும் அபாயம் உருவாகி உள்ளது. அவர்கள் தொழில் வாய்ப்புகளை, வருமானங்களை இழக்கும் பேரபாயம் தோன்றியுள்ளது.

'நிக்கொட்' திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் சுட்டிக்காட்டுவது போன்று எமது பிரதேசத்தில் மாற்றங்களும் கஷ்டங்களும் உண்டாகப் போகின்றன.

அவற்றில் இருந்து விடுபடுவதற்கு, எமது எதிர்காலப் பிரஜைகளான இன்றைய மாணவர்களை தொழிற் கல்வியிலும் தொழிற் பயிற்சியிலும் மிக மிக அதிகளவில் ஈடுபடுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

எங்கள் இயற்கை வளங்களின் அதி உச்சப் பயன்பாட்டுக்குஉவகைசெய்வதற்கு ஏற்றதான தொழிற் கல்வியும் தொழிற் பயிற்சியும் முற்றும் முழு அளவில் இன்றைய மாணவர்களுக்கு ஊட்டப்படுவது அத்தியாவசியம். அதற்கான வேலைத்திட்டங்களை காலம் தாழ்த்தாமல் தொடங்க வேண்டும்.

# இலங்கை வந்துள்ள ஐ.நா.பிரதிநிதி வோல்டர் நேற்று வவுனியா நலன்புரி முகாம்களுக்கு விஜயம்

கொழும்பு, ஏப்.5

இலங்கை வந்துள்ள ஐ.நாவின் செயலாளர் நாயகத்தின் உள்ளூரில்



இடம்பெயர்ந்த மக்களுக்கான பிரதிநிதி பேராசிரியர் வோல்டர் கேலன் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்து வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

விசேட வவுனியா முகாம், வன்னி இராணுவத் தலைமையகத்திலிருந்து செட்டிக்குளம் கதிர்காமர் நிவாரண கிராமம், அருவித்தோட்டம் முகாம் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிட்டனர். இவருடன் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், சமாதான செயலகப் பணிப்பாளர் ரஜீவ் விஜேயசிங்க, வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோரும் முக்கிய இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரிகளும் இங்கு சென்றிருந்தனர்.

மக்களின் நிறைகுறைகள், மக்களுக்கான சேவைகள், ஏற்கனவே தங்கவைத்த மக்களுக்கு செய்யப்பட்ட வசதிகள் மேலும் செய்யப்பட வேண்டிய சேவைகள் என்பன குறித்து அனைத்துத் தரப்பினரிடமும் கலந்துரையாடினர். அதன் பின்னர் வன்னி இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர். வவுனியா நகரப் பகுதிகளுக்கும், சில நலன்புரி நிலையங்களுக்கும் விஜயம் செய்தனர்.

## காரைநகர் ஈழத்துச் சிதம்பர பங்குனி மாதத் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.5

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த பங்குனிமாதப் பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து சோமஸ்கந்தர் தனது பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளி பஞ்சரத பவனி இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்கு நடேசர் உற் சவமும் 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

கடந்த மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந் திருவிழாவில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 6ஆம்திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு பெரிய சப்பறத் திருவிழாவும் 9ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும் (50-250)

## சிவபூமி முதியோர் இல்லத்தில் யோகர் சுவாமியின் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்.5

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் யோகர் சுவாமியின் குரு பூசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் ரி.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் செ.சிவசுப்பிரமணியம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மாணவர்களின் ஆன்மீகப் பிரார்த்தனையும் இதில் இடம்பெறும் என செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (50-9)

## ஒட்சிசன் தயாரிக்கும் இயந்திரம் மீண்டும் செயற்பட ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தயாரிக்கும்இயந்திரம் மீண்டும் நேற்று இயங்க ஆரம்பித்தது.

இந்த இயந்திரம் பழுதடைந்ததை அடுத்து அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன.

அந்த உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டு மீண்டும் அந்த இயந்திரம் நேற்று இயங்க ஆரம்பித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்த இயந்திரம் மீள இயங்க ஆரம்பித்துள்ளதால் கொழும்பில் இருந்து ஒட்சிசன் சிலிண்டர்களை கப்பல் மூலம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படாது என்று அதிகாரி ஒருவர் கூறினார். (1-224)

## 'சுருதி-4' சஞ்சிகை வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.5

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் 'சுருதி-4' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத் தலைவர் எம்.கோணேஸ்வர தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழக முன்னாள் தலைவர் ஏ.பஞ்சலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் என்.சண்முகவேலும் கௌரவ விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் செல்வி ரோகினி பேராயிரவர், பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீகுமரனும் கலந்துகொள்வர். (50-9-86)

## பூநகரி கண்ணாத்தீவுக் கடற்கரையில் இறங்க வேண்டாம் என படையினர் அறிவுறுத்து

குருநகர், ஏப்.5

யாழ்.குடாக்கடலில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பூநகரி கண்ணாத்தீவுத் தரைப் பகுதியில் இறங்க வேண்டாம் என படையினர் குருநகர் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கி யுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள தரைப் பகுதியில் விதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்குண்டு மீனவர்கள் இருவர் கடந்த 2 ஆம், 3 ஆம் திகதிகளில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்பகுதியில் மிதிவெடி அபாயம் இருக்கலாம் என சந்தேகப்படுவதால் எவரும் இப்பகுதிக்குச் செல்ல வேண்டாம் எனவும் -

அதனை மீறிச் சென்றால் அவர்க்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் - படையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர். (1-51)

### கோயில் குருக்களின் மனைவி கொலை:

## மரணதண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனுத்தாக்கல்

திருகோணமலை, ஏப்.5

திருகோணமலை கோணேசர் ஆலயக் குருக்களின் மனைவி கொலை வழக்கில் எதிரிக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரணதண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கோணேசர் கோயில் பிரதம குருக்களாக இருந்த சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர ஐயர் தனது மனைவி அம்பிகா என்பவரைக் கொலை செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு மரண தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கியிருந்தார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டு அரை மணித்தியாலத்தில் எதிரியின் மேன்முறையீட்டு மனுவை அவரின் கனிஷ்ட சட்டத்தரணி கே.எம்.தில்லைநாதன் தாக்கல் செய்தார்.

குற்றச்சாட்டு நியாயமான அளவு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. கொலையுண்டதாகத் தெரிவிக்கப்படும் அம்பிகா என்பவரின் மரணம் நிரூபிக்கப்படவில்லை. அரச தரப்பில் சாட்சியமளித்த கொலை உடந்தையாளரான பாலமுரளி சர்மா என்பவரின் சாட்சியம் ஒப்புறுதி செய்யப்படவில்லை என்ற காரணங்கள் மேன்முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. (1)

## லயன்ஸ் கழக மாநாடு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.5

கொக்குவில் லயன்ஸ்கழகத்தின் ஏற்பாட்டில் 'பார்வைக்கு முதலிடம்' மாவட்ட மாநாடும் போட்டியில் வெற்றியீட்டியவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு நவாலியில் உள்ள துரைஐயா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் லயன் பிரியந்த பெர்னாண்டோ கலந்துகொள்வார். (1-7)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி 24 | 06.04.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | துவாதசி |
| | மு.இ. 11.40வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.ப. 05.08 வரை |
| சுபநேரம்: | 12.08- 01.38 |
| [illegible]: | 07.38-09.05 |

## 'அன்னை அருள் மலர்' நூல் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஏப்.5

சரவணை மேற்கு அருள்வரத காளி அம்பாள் பேரில் அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரால் அருளிச் செய்யப்பட்ட 'அன்னை அருள் மலர்' எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர்ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையின் நிறைவுப் பேருரையும் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதனின் அறிமுக வுரையும் இடம்பெறும். (1)

## தேவாலயங்களில் இன்று குருத்தோலை ஞாயிறு

வண்ணை, ஏப்.5

கிறிஸ்தவ தேவாலயங்களில் குருத்தோலை ஞாயிறு திருப்பலி இன்று ஒப்புக் கொடுக்கப்படும்

அதனைத் தொடர்ந்து குருத்தோலைகள் வழங்கப்படும். குருத்தோலைகளில் சிலுவை செய்து வீடுகளில் வைத்து பேணி வருவார்கள்.

அடுத்த வருட தவக்காலம் ஆரம்பிக்க வீபூதிப் புதன்கிழமை இந்தச் சிலுவைகளை எரித்துசாம்பரை நெற்றியில் பூசிக் கொள்வது ஐதீகம். (1-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



## பொதுமக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை அரசாங்கம் பொதுமக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் உறுதி அளித்தது போன்று பாரிய ஆயுதங்களை பொதுமக்கள் வாழும் பிரதேசத்தில் தவிர்க்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களின் பிரகாரம் மோதல் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான அத்தியாவசிய வசதிகளையும் ஐ.நா. வழங்கும் மனிதாபிமான உதவிகளையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கு...டு துளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்த... தெரிவித்துள்ளது.

...தலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகர... பயன்படுத்திய குண்டு துளைக்காத ஆடம்பரக்கார் இதுவென உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நவீன வசதிகளும் கொண்ட குளிர்சாதனங்கள் பொருத்தப்பட்ட பங்களா ஒன்றையும் படையினர் மீட்டுள்ளனர். அத்துடன் சேதமடைந்த நிலையில் ஐந்து வாகனங்களையும் படையினர் மீட்டனர். அந்த இடத்தை விட்டுச் செல்வதற்கு முன்னர் வீடும், வாகனங்களும் எரிக்கப்பட்டிருக்கலாம் என்று படையினர் தெரிவித்தனர்.

அந்த வாகனங்களில் செயற்கை சுவாசம் வழங்கும் கருவிகள், நவீன வைத்திய உப கரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. காயம் அடைபவர்களுக்கு இறுதிக்கட்ட சிகிச்சை அளிக்கும் வசதிகள் அவற்றில் காணப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-1)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடற்படையினரின் சிறப்புப் படைப் பிரிவினர், அந்தப் பகுதியில் சென்று கொண்டிருந்த கடற்புலிகளின் படகுகள் அணியை அவதானித்து அவற்றின் மீது தாக் குதல் நடத்தினர். அதனைத் தொடர்ந்து அப் பகுதியில் மோதல் வெடித்தது என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

பத்துப்படகுகள் கொண்ட அந்த அணியில் மூன்று தற்கொலைத் தாக்குதல் படகுகளும் ஏழு தாக்குதல் படகுகளும் இடம் பெற்றிருந்தன. அவற்றில் ஒரு படகு முற்றாக அழிக்கப்பட்டது. மற்றொருபடகு செயழிலக்கச் செய்யப்பட்டது என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஏனைய இருபடகுகள் கடற்கரையை நோக்கிச் சென்றன. தரைப்படையினர் அவற்றைத் தாக்கி அழித்தனர் என்றும் கடற்படையினரின் மூன்று படகுகள் சிறிய சேதத்துக்குள்ளாகின என்றும் இரண்டு கடற்படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் விவரித்தது.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்காவுடன் மேற்படி மூன்று விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்த அவர், நாளை தமது விஜயத்தை முடித்துத் திரும்பும் போதும் அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் பணிபுரியும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், வவு னியா நலன்புரி நிலையங்களில் பணிபுரியும் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (1)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர்ந்ததமிழ் மக்களுடன் சேர்ந்து அந்தந்த நாட்டு மக்களும் உதவிப் பொருள்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஏ-9 வீதியூடான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் டபிள்யூ. பி.ஜே. செனவிரத்தின இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏ-9, ஏ-32 வீதிகளில் அமைந்துள்ள மின் கட்டமைப்புக்களை புனரமைந்து சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

அந்தப் பகுதிகளில் சேதமடைந்த மின் மாற்றிகள், மின் கடத்திகள் ஆகியனவற் றைப் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும், கடந்த 20 வருடங்களாக மின்சாரம் கிடைக்காத பகுதிகளுக்கும் மின் விநியோகம் வழங்கப்படும் - என்றார் அவர். (அ-1-6)

## இறுதி வெற்றியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். தேடுதல் மேற்கொண்ட படையினர் அந்தச் சடலங்களை மீட்டுள்ளனர் - என்றும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளின் இறுதிக் கோட்டையாகவிளங்கும் புதுக்குடியிருப்பில் பல பகுதிகள் படையினர் வசம் வீழ்ந்து விட்டன. எந்த நேரத்திலும் படையினர் தமது இறுதி இலக்கை அடைந்து விடுவார் கள் - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதுக்குடியிருப்பில் படையினர் கடைசி யாக மீட்ட ஆனந்தபுரம் பகுதியில் கூட்டம் கூட்டமாக நின்று படையினர் மீது தாக்குதல் நடத்தும் புலி உறுப்பினர்களை தேடி அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

படையினர் மீது 130 மி.மி. ஆட்லறி தாக்குதல்களை விடுதலைப்புலிகள் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். இத்தாக்கு தல்களுக்கு மத்தியிலும் படையினர் முன் னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றுபாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

## ஜி.சீ.ஈ.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான முடிவுகள் நேற்று பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டன. ஏனைய பிர தேச மாணவர்களுடைய முடிவுகள் தபால் மூலம் அனுப்பப்படவிருக்கின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தின் www. docnets.lk என்ற இணையத்தளம் மூலம் பரீட்சை முடிவுகளை பார்வையிடலாம் என்றும் அவர் கூறினார்.

## கருணாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ரேகன் (வயது 17) என்பவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். காயமடைந்த அலுவலகப் பொறுப்பாளரான மொகிலன் வெலிகந்த ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் அலுவலகமாக செயற்பட்டுவந்த இந்த அலுவலகம் தற்போது, அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்) அலுவலகமாகச் செயற்படுவதாகக் கூறப்பட்டது.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து அந்த அலுவலகத்தில் தங்கியிருந்த சந்திரசேகரன், குகன் ஆகியோர் தலைமறைவாகி விட்டனர் என்றும் -

அவர்கள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட வர்களாக இருக்கக்கூடும் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை காலை தொடக்கம் மாலை வரை படையினர் தொடர்ச்சியாக ஆட்லெறி ஷெல், பல்குழல் ஷெல், மோட்டார், பீரங்கி, ஆர்பிஜி உந்துகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

இத்தாக்குதலில் 29 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 31 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:-

சின்னத்தம்பி சசிக்குமார் (வயது 28), பெருமாள் பெரியசாமி (வயது 55), சசிக்குமார் சின்னச்சாமி (வயது 28), சா. இராசபூபதி (வயது 60), வல்லிபுரம் சுதர்சன் (வயது 32), தமிழ்ச்செல்வன் தயாநிதி (வயது 11), பாலகரன் விஜயகுமாரி (வயது 30), ஐயம்பிள்ளை கோபாலசிங்கம் (வயது 47), முருகையா நகுலேஸ்வரன் (வயது 25), விஜயரட்ணம் கிருஸ்ணவேணி (வயது 32), முருகேசு விமலேந்திரன் (வயது 30), கேதீஸ்வரன் ஜெனிசா (வயது 12), முகுந்தன் சாருயன் (வயது 14), பாக்கியநாதன் கம்சஜ (வயது 12), காத்தலிங்கம் பாலன் (வயது 13), கேதாரம் வேதாரணியம்பிள்ளை (வயது 32), பாலசிங்கம் கனிஸ்டன் (வயது 18), மேகன் முருகானந்தம் (வயது 28), காத்தமுத்து பவிசன் (வயது 10), முருகானந்தம் தவராசா (வயது 09), முத்துலிங்கம் பவித்திரா (வயது 08), கபிலன் ரூபன்ராஸ் (வயது 29), இரத்தினம் கந்தையா (வயது 40), முத்தையா பாஸ்கரன் (வயது 39), பாஸ்கரன் கேதுசா (வயது 13), முனியாண்டி கிருஸ்ணவேணி (வயது 24), தம்பையா மதியாபரணம் (வயது 35) மேலும் இருவரின் பெயர் விவரம் கிடைக்கப்பெறவில்லை- என்றுள்ளது. (அ-1)

## சைக்கிள்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

19 லொறிகளிலும் இரண்டு குளிரூட்டி லொறிகளுமாக அவை வாகன அணியில் ஏ-9 வீதியூடாக எடுத்துவரப்பட்டன.

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனங்கள் தமது முகவர்களாக இயங்கும் வர்த்தகர்களுக்கே பொருள்களை அனுப்பியுள்ளன.

மென்பானம், பிஸ்கட், பழவகைகள், இனிப்பு வகைகளுடன் சைக்கிள்கள், சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் ஆகிய வற்றுக்கு உரிய ரயர்கள், மெத்தைகள் ஆகிய பொருள்கள் லொறிகளில் எடுத்துவரப்பட்டுள்ளன.

பொருள்கள் இறக்கும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பொருள்களுக்குரிய முகவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வாகன அணி இங்கிருந்து வெங்காயம் மற்றும் கடலுணவுகளை ஏற்றிக்கொண்டு இன்று புறப்படவிருக்கிறது. (அ-1)

## ஆஸியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் சிங்களவர் குழு ஒன்று அகோரமாகத் தாக்கத் தொடங்கினர். தமிழீழத் தேசியக் கொடிகளை பறித்து கிழித்து கால்களில் போட்டு மிதித்தனர்.பதாகைகளை பறித்து கிழித்து எறிந்தனர். வாகனத்தின் கதவுகளை திறந்து, உள்ளே இருந்தவர்களை தாக்கி அவர்கள் மீது காறியும் உமிழ்ந்தனர்.

தேசியக் கொடியை பறிக்கும்போது அதனை தரமறுத்த தமிழர்களை சிங்களவர்கள், கைகளை வாகனத்தின் ஜன்னலுடன் சேர்த்து வைத்து தாக்கினர்.தமிழர்களின் ஒளிப்படக் கருவிகளும் பறித்து உடைக்கப்பட்டன.

இந்தச் சரமாரியான தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட பல தமிழர்கள் காயங்களுக்கு உள்ளாகினர். 5 தமிழர்கள் கடும் இரத்தக்காயங்களுக்கு உள்ளாகினர். அவர்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக நோயாளர் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தமிழர்களின் சுமார் 7க்கும் அதிகமான வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டு சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டன.

அவுஸ்திரேலிய காவல்துறையினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தம்மாலான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டனர்.

பிற்பகல் 4:30 மணியளவில் பேரணி சென்று சேருவதற்கு திட்டமிட்டப்பட்டிருந்த இடத்தை சென்றடைந்தது.

தமிழ் இளையோர் அமைப்பினால் நேற்று சனிக்கிழமை வாகனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவே காவல்துறையினரிடம் அனுமதி பெறப்பட்டதன் பிரகாரம் தமிழ் மக்களின் வாகனப் பேரணி திட்டமிடப்பட்ட வீதிகளின் ஊடாக அமைதியாக சென்று கொண்டிருந்தது. அப்போதே அங்கு வந்த சிங்களவர் குழு ஒன்று தாக்குதல் நடத்தியது.

இப்பேரணியின் ஓர் அங்கமாக மெல்பேர்ண் வான்பரப்பில் ''சிறிலங்காவே தமிழ் மக்களை கொல்வதை நிறுத்து'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகை வானூர்தியும் பறப்பில் விடப்பட்டது. (அ-1)

மலிவு விலையில்......

திருமண அழைப்பிதழ்கள்

ADORNA CARDS

விசேட விலைக்கழிவு 10%

www.andradesigns.com



புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய

திருமண அழைப்பிதழ்களை

எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

ANDRA DIGITAL IMAGE

# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)

# 68, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

இணையத்தள முகவரி : www.andradesigns.com

ஒர்சியேற்றல் - தாழ்த்தல்

இரசாயனவியல் நூல் வெளியீடு

காலம்: நாளை (06.04.2009) திங்கட்கிழமை மதியம் 1.00மணி

இடம்: கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, வடமராட்சி

பிரதமவிருந்தினர்

திரு. வே.தி.செல்வரத்தினம்
மேலதிக கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்

சிறப்புவிருந்தினர்கள்

திரு. வி.செல்வராஜா
வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி

திரு. வே.சிவசிதம்பரம்
அதிபர், விக்னேஸ்வரக் கல்லூரி

முதற்பிரதி பெறுபவர்

திரு. வே.சிவசிதம்பரம் (அதிபர்)

ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

நூலாசிரியர்
S.VASU

PERSONAL CLASSES & GROUP CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMER AND G.C.E (O/L) ENGLISH CLASSES BY QUALIFIED TEACHER.

Contact No: 0712109073 or 0778999848.

வைத்திய சேவை மீண்டும் ஆரம்பம்

அர்ச்சனா நர்சிங்கோம்

மீண்டும் தனது வைத்திய சேவையை ஆரம்பித் துள்ளது.

மயிலணி,
சுன்னாகம். நிர்வாகி.

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

நிறை கூடிய தரமான புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

செம்மணி பாம்
77/3, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

வலி மேற்கு கணித விஞ்ஞான மாணவர்கட்கு ஓர் நற்செய்தி

Subra(14)

சித்தன்கேணியில்

THE SCIENCE CORNER

ஆசிரியர் குழாமின் சேவை

ஆரம்பம் - April 5 (ஞாயிறு) 3.00 மணி

Microsoft Certified Systems Engineer

* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 06.04.2009 08.00AM

Become an Engineer

விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

MCS
Supported By UNDP/JRRP
www.mcsacademy.com

LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம் [ICRC சந்தி அருகாமையில்]

★ நவீன ஸ்கான் (Scan), ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.

Branches

151, Kannathiddy Road. T.P.: 021 222 7251

71, Sivapiragasam Road, Vannarponnai, Jaffna.

web: www.lavaonline.net E.mail: lavasss@yahoo.com

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான

துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

உள்நாடு,வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன்,சுவிஸ்,பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும் கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம்

WESTERN UNION ®

MMBL Money Master

New Branch TCN EXPRESS

2B, Nelsan Place, Colombo -06 - T.P: 0112364525

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.